(2022)5 எஸ்.சி.ஆர்.921

இந்திய உச்ச நீதிமன்றம்

மே 02, 2022

மாண்புமிகு நீதயரசர் திரு.ஹேமந்த் குப்தா

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு.வி.ராமசுப்ரமணியன்

உரிமையியல் மேல் முறையீட்டு எண்கள்.3585-3586/2022

அரவிந்த் ஆர்.ஏ -மேல் முறையீட்டாளர்

/ எதிராக /

இந்திய அரசின் சுகாதாரம் மற்றும் -எதிர்மேல் முறையீட்டாளர்கள்

குடும்ப நல அமைச்சகத்தின் செயலர் மற்றும் பலர்

தேசிய மருத்துவ ஆணையம் (வெளிநாட்டு மருத்துவ பட்டதாரிகள் உரிமம்) ஒழுங்கு விதிமுறைகள் 2021 – ஒழுங்கு விதிமுறைகள் 4(a)(i), 4(a) (ii), 4(b) மற்றும் 4(c) – அரசமைப்பு சட்டத்தின் - விதிமுறைகள் 4(a)(i)-ன் கீழ் தெரிவிக்கப்பட்ட எதிர்பானது, வெளிநாட்டு மருத்துவப் படிப்பைத் தேடும் மாணவர்கள் தங்களது கடமையாக 54 மாத காலப் படிப்பை வழங்கும் நிறுவனத்தை மட்டும் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற அனுமானத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது- விதிமுறைகள் 4(a)(ii) மற்றும் 4(b) ஆகியவற்றிக்கான எதிர்ப்புகளானது அவை வெளிநாட்டு மருத்துவ பட்டதாரிகளுக்கு அதே வெளிநாட்டு மருத்துவ நிறுவனத்தில் 12 மாதங்கள் பயிற்சியை பெறுவதும், அந்த நாட்டின் தொழில் சார்ந்த ஒழுங்கு முறை அமைப்பின் கீழ் பதிவு செய்வதும் கட்டாயமாக்கப்படுவதால், அவை புற நிலவரை சட்டத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது - விதிமுறைகள் 4(இ)-ன் கீழ் உள்ள எதிர்பானது, அவை வெளிநாட்டு மருத்துவ

பட்டதாரிகளுக்கு தேவையற்ற சிரமங்களை ஏற்படுத்தி அவர்களை 12 மாதம் இந்தியாவில் மேற்பார்வைக்குட்பட்ட பயிற்சியை மேற்கொள்ள கட்டாயப்படுத்துவதுடன் அவர்கள் இரண்டு பயிற்சிகளை ஒன்று வெளிநாட்டிலும், மற்றொன்று தாய் நாட்டிலும், மேற்கொள்ளும் நிலைக்கு ஆளாகின்றனர் - உயர்நீதிமன்றம் மேற்கூறிய ஒழுங்கு விதிமுறைகள் அரசமைப்பு சட்டத்தின் 14, 19(1) (g) வகுமுறை கூறுகளுக்கு எதிரானவை அல்ல என்ற அடிப்படையில் நீதிபேராணை மனுக்களை தள்ளுபடி செய்தது - சரியான தன்மையின் - முடிவாக: சரியான - குறைந்தபட்ச தரங்களின் பரிந்துரையானது நிச்சயமாக ஒரு பாட திட்டத்திற்கான குறைந்தபட்ச கால அளவைக் குறிக்கும் மற்றும் இது மற்ற நாடுகளின் மருத்துவ நிறுவனங்களுக்கு தங்கள் நாட்டு மாணவர்கள் 54 மாதங்களுக்கும் குறைவான கால அவகாசத்தை பரிந்துரைக்க வெளிப்படுத்தும், ஆனால் பதவியில் இருப்பவர் இந்தியாவில் நிரந்தரப் பதிவு செய்ய விரும்பினால், குறைந்த கால வெளிநாட்டு மருத்துவப் பட்டங்களை தேசிய மருத்துவ ஆணையமும் மத்திய அரசும் அங்கீகரிக்க வேண்டிய அவசியமில்லை - அதே வெளிநாட்டு மருத்துவ நிறுவனத்தில் 12 மாத குறைந்தபட்ச காலத்திற்கான பயிற்சியின் பரிந்துரையானது அதன் பிரதியாக எடுத்துக்கொள்ள இயலாது, ஏனெனில் பயிற்சியின் நோக்கமானது மாணவர்கள் தங்கள் கல்வியை அவர்களின் பாடங்களில் ஒரு அறிவான, அதாவது நோயாளிகளின் மீது பயன்படுத்தி அவர்களது திறனைச் சோதிப்பதற்கே ஆகும் - இந்திய அரசமைப்பு - வகுமுறை கூறுகள் 14, 19(1) (ஜி) மற்றும் 21.

தேசிய மருத்துவ ஆணையம் (கட்டாய சுழற்சிமுறை மருத்துவப் பயிற்சி) விதிமுறைகள், 2021 - அட்டவணை II -2(அ) மற்றும் 2(இ)(i) – அட்டவணை II- பத்தி 2(a) (i)-ன் படி அனைத்து வெளிநாட்டு மருத்துவ பட்டதாரிகளும் இந்திய நாட்டின் மருத்துவ பட்டதாரிகளுக்கு இணையாக பயிற்சி பெற வேண்டும் - அட்டவணை II பத்தி 2(c) (i) ஆனது வெளிநாட்டு மருத்துவப் பட்டதாரிகளை புதிதாக திறக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட வேண்டிய

கல்லூரிகளில் முதலில் நியமித்து, மாணவர்களின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்குகிறது என்று அனுமானிப்பதாக எதிர்க்கப்படுகிறது. உயர் நீதிமன்றம் எந்த விதிமுறைகளும் அரசமைப்பு வகுமுறை கூறுகள் 14, 19(1) (g) மற்றும் 21-க்கு எதிரானவை அல்ல என்று நீதிபேராணை மனுக்களை தள்ளுபடி செய்தது - மேல்முறையீட்டில், முடிவாக; அட்டவணை -I, பத்தி 2(a)-ல் வெளிநாட்டு மருத்துவப் பட்டதாரிகள், இந்திய மருத்துவப் பட்டதாரிகளுக்கு இணையாக பயிற்சியை மேற்கொள்வது என்பது ஒரே மாதிரியான திறன்களைப் பெற்றவர்கள் மட்டுமே மருத்துவப் பயிற்சியை செய்ய அனுமதிக்கப்படுவார்கள் என்பதை உறுதிசெய்கிறது, எனவே, அதில் எந்தவொரு பொருளும் இல்லை என்று எதிர்க்கப்படுகிறது - வெளிநாட்டு மருத்துவ பட்டதாரிகள் புதிதாக திறக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட வேண்டிய கல்லூரிகளில் முதலில் நியமிப்பது என்ற அட்டவணை II பத்தி 2(c)(i)-ன் கீழ் உள்ள பரிந்துரையானது, அவசியமான ஒன்றாகும் - ஏனெனில் நாட்டின் அனைத்து மருத்துவ நிறுவனங்களும் தங்களை அனுமதிக்கப்பட்ட கொள்திறன் அளவுக்கு உள்ள மாணவர்களை மட்டுமே பயிற்சிகள் வழங்குவதற்கு தயார்படுத்துகிறது, எனவே, இந்த ஒழுங்குமுறைகள் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மீது தேவையற்ற சுமையை விதிக்கப்படுவதில்லை என்று உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

மேல்முறையீடுகளை தள்ளுபடி செய்து, இந்நீதிமன்றம்

முடிவாக: 1. மேல்முறையீட்டாளர், உரிம விதிமுறைகள் 4(a) (i) மற்றும் ஒழுங்குமுறை 4 (a) (ii), 4(b) மற்றும் 4(c) ஆகியவற்றின் செல்லும் தன்மையை பல காரணங்களுக்காக, அவற்றில் ஒன்று சட்டத்தின் கீழ் அதிகாரம் இல்லாதவை என்று எதிர்த்துள்ளார் - மேலே பிரித்தெடுக்கப்பட்ட விதிகள், மேலே உள்ள விதிமுறைகளை வடிவமைக்க என்.எம்.சி- க்கு அதிகாரம் இருப்பதைக் காட்டுகிறது. குறைந்தபட்ச

தரநிலைகளின் பரிந்துரை நிச்சயமாக ஒரு பாடத்திற்கான குறைந்தபட்ச கால அளவுக்கான பரிந்துரையை உள்ளடக்கியிருக்கும். பிற நாடுகளின் மருத்துவ நிறுவனங்களுக்கு தங்கள் நாட்டு மாணவர்களுக்கு 54 மாதங்களுக்கும் குறைவான கால அவகாசத்தை அது பரிந்துரைக்கிறது. ஆனால், பதவியில் இருப்பவர் இந்தியாவில் நிரந்தரப் பதிவு செய்ய விரும்பினால், என்.எம்.சி மற்றும் மத்திய அரசு குறைந்த கால அளவுக்கு வெளிநாட்டு மருத்துவப் பட்டங்களை அங்கீகரிக்க வேண்டிய அவசியமில்லை. குறைந்தபட்சம் 12 மாதங்களுக்கான பயிற்சியை வெளிநாட்டு மருத்துவ நிறுவனத்தில் பரிந்துரை செய்வது பயிற்சியின் பிரதியாக கூற இயலாது. பயிற்சியின் நோக்கமானது மாணவர்களின் கல்வி அறிவை அவர்களின் பாடங்களில் அதாவது நோயாளிகளின் மீது பயன்படுத்துவதற்கான திறனை சோதிப்பதாகும். மற்ற நாடுகளின் மருத்துவ நிறுவனங்கள் தங்கள் நாட்டின் மக்கள் தொகையில் தங்கள் திறன்களை சோதிக்காத மாணவர்களுக்கு கடுமையான பயிற்சியை வலியுறுத்துவதில்லை. அதேபோல், வெளிநாட்டில் மருத்துவக் கல்வி கற்கும் மாணவர்கள் தாங்கள் படித்த நாட்டின் மக்கள்தொகையில் முதலில் தங்கள் திறமைகளை வெளிப்படுத்துவதை உறுதிசெய்ய விதிமுறை 4(b)-ன் கீழ் அவசியமாக்கப்பட்டுள்ளது. ஒரு மாஸ்டர் செஃப் அவர் தயாரித்த உணவை விருந்தினர்களுக்கு பரிமாறுவதற்கு முன்பு சுவைக்க வேண்டிய அவசியம் தன்னிச்சையானது என்று சொல்ல முடியாது. எனவே, உரிம விதிமுறைகள் முற்றிலும் அடிப்படையில்லாதவை என்று எதிர்க்கப்பட்டுள்ளது.

[பத்திகள் 51-54]

2. பிரிவு 36(4) எம்.பி.பி.எஸ் என்ற படிப்பு, 54 மாதங்களுக்கும் குறைவான காலப் படிப்புகள் என்றும் எனவே, உரிம விதிமுறைகள் ஒரு துணைச் சட்டமாக இருப்பதால், அது விதிமீறல் என்ற வாதம் முற்றிலும் நிலைக்கத்தக்கதல்ல. பிரிவு 36 -ன் உட்பிரிவு (4)-ல் உள்ள

அனைத்தும் 1956 சட்டத்தின் இரண்டாம் அட்டவணை மற்றும் மூன்றாம் அட்டவணையின் பகுதி - II -ன் கீழ் சேர்க்கப்பட்டு சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்பே அங்கீகரிக்கப்பட்ட தகுதிகள் ஆகும். கடந்த கால பாவங்கள் முற்றிலும் அகற்றப்பட வேண்டும் என்ற சங்கதியானது, பாடநெறி திருத்தம் இருக்க கூடாது என்று கருத ஒரு அடிப்படையாக எடுத்துக்கொள்ள இயலாது. பிரிவு 60 ஆனது, ரத்து மற்றும் சேர்ப்பு உள்ளிட்ட சங்கதிகளை குறிக்கிறது. மேலும் உட்பிரிவு (2)-ன் கூறு (b)-ன் கீழ் ஏற்கனவே உள்ள எந்தவொரு உரிமையையும், சலுகையையும் மற்றும் கடமையையும் பாதுகாக்கிறது. இது எதிர்கால மாணவர்களுக்கு பரிந்துரைக்கப்பட்டவற்றுடன் முரண்படுவதாகக் கூற முடியாது. எவ்வாறாயினும், பிரிவு 36 வெளிநாட்டு மருத்துவப் படிப்புகளை அங்கீகரிப்பதை மட்டுமே குறிக்கிறது மற்றும் மருத்துவ பயிற்சியாளராக பதிவு செய்வதை குறிப்பதில்லை. பிரிவு 33-ன் கீழ் பதிவு செய்வது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, பிரிவு 36 (4) மேல்முறையீட்டாளருக்கு உதவ முடியாது.

[பத்தி 55]

3. நாட்டிற்கு அதிகமான மருத்துவர்கள் தேவை மற்றும் வெளிநாட்டு மருத்துவ பட்டதாரிகள் பதிவுகளை கட்டுப்படுத்துவதன் மூலம், வகுமுறை கூறு 19(1)(g)-ன் கீழ் தொழில் வல்லுநர்களின் அடிப்படை உரிமையும், வகுமுறை கூறு 21-ன் கீழ் குடிமக்களின் அடிப்படை உரிமையும் பாதிக்கப்படுகிறது என்ற வாதம் நிராகரிக்கப்பட வேண்டும். நாட்டிற்கு அதிகமான மருத்துவர்கள் தேவை என்பது உண்மைதான், ஆனால் அதற்கு உண்மையில் தகுதியான மருத்துவர்கள் தான் தேவை மேலும், தங்கள் தாய் மண்ணில் மட்டுமே தங்கள் திறமைகளை சோதிக்க வேண்டும் என்று, வெளிநாடுகளில் உள்ள நிறுவனங்களில் பயிற்சி பெற்றவர்கள் தேவையில்லை. [பத்தி 56]

4. இந்த ஒழுங்குமுறைகள் ஒரு புற நிலவரைச் சட்டத்தை உருவாக்குகின்றன என்ற வாதம் தவறானது. இந்த ஒழுங்குமுறைகள் அந்த நிறுவனங்கள் அமைந்துள்ள நாடுகளில் பயிற்சி செய்ய விரும்பும் மாணவர்களுக்கு குறைந்தபட்ச தரங்களை நிர்ணயிப்பதன் மூலம், அந்த நாடுகளில் இறையாண்மையில் நுழைவதில்லை. இந்த விதிமுறைகள் அந்த நிறுவனங்களில் படிப்பவர்கள், ஆனால் இந்தியாவில் பயிற்சி செய்ய விரும்புபவர்கள் பூர்த்தி செய்ய வேண்டிய குறைந்தபட்ச தரங்களை மட்டுமே பரிந்துரைக்கின்றன.[பத்தி 57]

5. சி.ஆர்.எம்.ஐ விதிமுறைகளுக்கு உள்ள எதிர்பானது எந்தவொரு பொருளும் இல்லாமல் உள்ளது. கட்டாய பயிற்சியில் இல்லாமல் முதன்மை மருத்துவத் தகுதியை வழங்கும் நிறுவனங்கள் சில நாடுகளில் இருந்தால், மாணவர்கள் அந்த நிறுவனங்களில் சேர்க்கை பெறக்கூடாது. தகுதிவாய்ந்த மருத்துவ நிபுணர்களாக மாற வேண்டும் என்ற மனகுழப்பத்தோடு ஏற்படும் வேகம், வெற்றிக்கான குறுக்குவழிகள் வழங்கும் நாடுகளுக்கு அவர்களை அழைத்துச் செல்ல முடியாது. அட்டவணை -II ன் பத்தி 2 (அ)-ன் கீழ் உள்ள விதிமுறைகளின் கீழ் இந்திய மருத்துவப் பட்டதாரிகளுக்கு இணையாக வெளிநாட்டு மருத்துவப் பட்டதாரிகள் பயிற்சிகளை மேற்கொள்வது என்பது ஒரே போன்ற திறமைகளை பெற்றவர்கள் மட்டுமே மருத்துவப் பயிற்சி செய்ய அனுமதிக்கப்படுவதை உறுதி செய்வதாகும். இந்த ஒழுங்குமுறைகளின் அட்டவணை - II ன் பத்தி 2 (இ) (i)-ல் உள்ள பரிந்துரையானது புதிதாக திறக்கப்பட்ட மற்றும் இன்னும் அங்கீகரிக்கப்படாத கல்லூரிகளில் இது போன்ற வெளிநாட்டு மருத்துவப் பட்டதாரிகளை முதலில் நியமிக்கலாம் என்பது அவசியத்திற்கான ஒரு பரிந்துரையாகும். நாட்டின் அனைத்து மருத்துவ நிறுவனங்களும், அனுமதிக்கப்பட்ட மாணவர்களை கொள்திறன் அளவுக்கு மட்டுமே பயிற்சியை வழங்கத் தயாராக உள்ளன. எனவே, ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட

நிறுவனங்களின் மீது தேவையற்ற சுமை சுமத்தப்படாமல் இருப்பதை உறுதி செய்வதே இந்த ஒழுங்குமுறையின் நோக்கமாகும். **[பத்தி 58 மற்றும் 59]**

இந்திய மருத்துவ குழு எதிராக ரஷ்யாவின் நலவாழ்வு சங்கங்கள் மற்றும் அமைப்புகளின் இந்திய மருத்துவர்கள். (2002) 3 **எஸ்.சி.சி 696**; சஞ்சீவ் குப்தா எதிராக யூனியன் ஆஃப் இந்தியா (2005) 1 **எஸ்.சி.சி 45**: (2004) 6 **துணை.எஸ்.சி.ஆர் 49**; இந்திய மருத்துவ குழு எதிராக ஜே.சாய் பிரசன்னா மற்றும் பலர். (2011) 11 **எஸ்.சி.சி 748**; நவீன பல் மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம் மற்றும் பலர் எதிராக மத்திய பிரதேச மாநிலம் மற்றும் பலர் (2016) 7 **எஸ்.சி.சி 353** (2016) 3 **எஸ்.சி.ஆர் 579** குறிப்பிடப்பட்டுள்ளது. பதிவாளர், திருவாங்கூர் - கொச்சின் மருத்துவக் குழு மற்றும் பலர். 2019 (4) **எஸ்.சி.டி. 224 (கேரளா)**; சாதியா சியாத் எதிராக கேரள மாநிலம் மற்றும் பலர் 2021 (6) **கே.எல்.டி. 94** -குறிப்பிடப்பட்டுள்ளது.

<u>தீர்ப்புகளின் குறிப்புகள்</u>

(2002) 3 எஸ்.சி.சி 696	பத்தி 29	குறிப்பிடப்படுகிறது.
(2004) 6.துணை. எஸ்.சி.ஆர் 49	பத்தி 30	குறிப்பிடப்படுகிறது.
(2011) 11 எஸ்.சி.சி 748	பத்தி 35	குறிப்பிடப்படுகிறது.
(2016) 3 எஸ்.சி.ஆர் 579	பத்தி 40	குறிப்பிடப்படுகிறது.

உரிமையியல் மேல் முறையீட்டு அதிகார வரம்பு : உரிமையியல் மேல் முறையீட்டு எண்கள்.3585-3586/2022

சென்னை உயர்நீதிமன்றத்தித்தால் 24.02.2022 அன்று, நீதிபேராணை மனுக்களான, நீதி பேராணை மனு /3667/2022 மற்றும் நீதிபேராணை மனு/ 3670 /2022 -ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு மற்றும் தீர்ப்புரை.

வழக்குரைஞர்கள்; மேல்முறையீட்டாளருக்காக

திரு. கோபால் சங்கர நாரயணன், மூத்த வழக்குரைஞர், திரு.எஸ்.சந்தானம் சுவாமி நாதன், செல்வி.அபிலாஷா ஸ்ராவத், செல்வி.ஹிமாநி தாக்கூர், திரு.கார்த்திக் மல்ஹோத்ரா, திருமதி.ஆர்த்தி ராஜன், செல்வி.சிவாநி வி.ஐ.எஸ்.

தீர்ப்புரை

தீர்ப்புரையானது மாண்புமிகு நீதியரசர் திரு.வி.ராமசுப்பிரமணியன் அவர்களால் அவையறிய பகிரப்பட்டது.

1. மேல் முறையீட்டு மனுதாரர் 18.11.2021 தேதியன்று வெளியிடப்பட்ட முறையே, (i) இது முதல், உரிம விதிமுறைகள்' என்று குறிப்பிடப்படும் தேசிய மருத்துவ ஆணையம் (வெளிநாட்டு மருத்துவ பட்டதாரிகள் உரிமம்) விதிமுறைகள், 2021-ன் கீழே உள்ள 4(அ) (i), 4(அ) (ii), 4(ஆ) மற்றும் 4 (இ) ஆகிய விதிமுறைகள் மற்றும் (ii) (இதுமுதல், 'சி.எம்.ஆர்.ஐ விதிமுறைகள் என குறிப்பிடப்படும்) தேசிய மருத்துவ ஆணையம் (கட்டாய சுழற்சிமுறை மருத்துவ பயிற்சி) விதிமுறைகள், 2021-ன் பட்டியல் அட்டவணை-II-ல் 2(அ) மற்றும் 2 (இ) (i) ஆகியவையும் அதிகார வரம்பை மீறியவை என்றும் இந்திய அரசமைப்பு சட்டத்தின் வகுமுறை கூறுகளான 14, 19(1) (எ) மற்றும் 21-ன் விதி மீறல் என்றும் விளம்புகை செய்யக்கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த இரண்டு நீதிபேராணை மனுக்களும் தள்ளுபடி ஆனதால் பாதிப்படைந்து, தற்பொழுதைய இரண்டு மேல்முறையீட்டுகளையும் தாக்கல் செய்துள்ளார்.

2. மேல் முறையீட்டு மனுதாரர் தரப்பில் முன்னிலையான மூத்த வழக்கறிஞர் திரு.கோபால் சங்கரநாராயணன் அவர்களின் வாதங்களை நாங்கள் கேட்டோம்.

3. மேல் முறையீட்டு மனுதாரர், தனது மேல்நிலை பள்ளிக் கல்வியை 2021 ஆம் ஆண்டு, நடுவண் இடைநிலைக் கல்வி வாரியப் பாடத்திட்டத்தின் கீழ் முடித்துள்ளார். அவரைப் பொறுத்தவரை அவர் 2021 ஆம் ஆண்டு நடைப்பெற்ற நீட் தேர்வில் பங்குப்பெற்று அதில் 55.443417 சதவீத மதிப்பெண்களைப் பெற்று, அகில இந்திய நீட் தரவரிசையில் 68772-ம் இடத்தில் உள்ளார். எனவே, இந்தியாவில் அவர் விரும்பிய மருத்துவக் கல்லூரியில் அவரால் சேர்கை பெற இயலவில்லை.

4. வாதிடுகையில், (i) தான் மொரீசியஸ்-ல் உள்ள அண்ணா மருத்துவ கல்லூரியில் மருத்துவ பட்டப்படிப்பில் சேர விரும்புவதாகவும்; (ii) பெரும் நோய்த்தொற்று பரவுதல் காரணமாக சர்வதேச பயணத்தின் மீதான கட்டுப்பாடுகளால், அவரால் 2021-2022-ன் கல்வி ஆண்டில் மேற்படி பாடநெறியில் சேர இயலவில்லை; மற்றும் (iii) இதற்கிடையில், இந்திய தேசிய மருத்துவ ஆணையம் கொண்டு வந்த உரிமம் மற்றும் சி.எம்.ஆர்.ஐ விதிமுறைகள், வெளிநாட்டில் மருத்துவக் கல்வியைத் தொடர விரும்பும் மாணவர்களின் மீது அதிக மற்றும் தன்னிச்சையான சுமையை சுமத்தியதால், மேல்முறையீட்டாளர் மேற்கூறிய இரண்டு நீதிபேராணை மனுக்களையும் தாக்கல் செய்தார்.

5. எதிர்ப்புக்குள்ளான விதிமுறைகளானது குறைந்தபட்ச தரத்தை உறுதி செய்யும் நோக்கில் வெளியிடப்பட்டதாகவும், அவை எந்த வகையிலும் சட்டம் அல்லது அரசமைப்பு சட்டத்தை மீறுவதாக இல்லை என்பதைக் கண்டறிந்து, சென்னை உயர் நீதிமன்றத்தின் நீதியராயமானது, நீதிபேராணை மனுக்களை தள்ளுபடி செய்தது. உயர் நீதிமன்றம், மேல் முறையீட்டாளர் வெளிநாட்டில் உள்ள எந்தவொரு நிறுவனத்திலும் சேர்க்கைக்காக விண்ணப்பிக்கவில்லை என்றும் அதனால் நீதிபேராணை மனுக்கள் தவறான துணிகரச்

செயலை தவிர வேறில்லை என்றும் கருதி, மேல்முறையீட்டு மனுதாருக்கு ரூ.25,000/- செலவுத்தொகை செலுத்த விதித்தது. எனவே தான், இம்மேல் முறையீட்டு மனுக்களை மேல் முறையீட்டாளர் முன்வைத்துள்ளார்.

6. முன்பு சுட்டிக்காட்டப்பட்டபடி, உயர்நீதிமன்றத்தின் முன் மேல் முறையீட்டாளரால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்ட சில விதிகளானது இரண்டு வெவ்வேறு விதிமுறைகளின் தொகுப்பாகும். முதலாவது தொகுப்பு விதிகளான உரிமம் விதிமுறைகளானது, தேசிய மருத்துவ ஆணைய சட்டம், பிரிவு 57 உடன் இணைந்த பிரிவு 15 உட்பிரிவு 4-ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களின் படி தேசிய மருத்துவ ஆணையத்தால் வழங்கப்பட்டதாகும். இரண்டாவது தொகுப்பு விதிமுறைகளான சி.ஆர்.எம்.ஐ விதிமுறைகளானது, மேற்படி சட்டப்பிரிவு 57 உடன் இணைந்த பிரிவு 24 உட்பிரிவு (i) -ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரகங்களின்படி ஆணையத்தால் வழங்கப்பட்டதாகும்.

7. எளிமையாக குறிப்பிடும் நோக்கத்தில், மேல் முறையீட்டாளர் சென்னை உயர் நீதிமன்றத்தில், எதிர்ப்பு தெரிவித்த விதிமுறைகள் இரு அணிவரிசையில் பின்வருமாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

என்.எம்.சி (எஃப்.எம்.ஜி.எல்) ஒழுங்கு விதிமுறைகள், 2021

(உரிமம் விதிமுறைகள்)

ஒழுங்குமுறைகள்	வழிவகைகள்
4. வெளிநாட்டு மருத்துவ பட்டதாரிகளுக்கு நிரந்தர பதிவு வழங்கல்	எந்தவொரு வெளிநாட்டு மருத்துவ பட்டதாரிக்கும் பின்வரும் சூழ்நிலை இல்லை எனில், நிரந்தரப் பதிவு அவருக்கு வழங்கப்படாது-

	(அ) (i) குறைந்தபட்சம் ஐம்பத்தி நான்கு மாதங்கள் கொண்ட வெளிநாட்டு மருத்துவப் பட்டம் பெற வழிவகுத்த ஒரு பாடநெறியை மேற்கொண்டது; (ii) அதே வெளிநாட்டு மருத்துவ நிறுவனங்களில் குறைந்தபட்சம் பன்னிரண்டு மாதங்களுக்கு பயிற்சியைப் பெற்றிருக்க வேண்டும். (ஆ) அந்தந்த தொழில் சார்ந்த ஒழுங்குமுறை அமைப்பில் பதிவு செய்யப்பட்ட அல்லது மற்றபடி, அந்தந்த அதிகார வரம்பில் மருத்துவ பயிற்சி செய்வதற்கான உரிமம் வழங்க தகுதியுடையவர் மற்றும் அந்த நாட்டின் குடிமகனுக்கு வழங்கப்பட்ட மருத்துவ பயிற்சி உரிமத்திற்கு இணையாக (இ) ஆணையத்திற்கு விண்ணப்பித்த பிறகு, குறைந்தபட்சம் பன்னிரண்டு மாதங்களுக்கு இந்தியாவில் மேற்பார்வையிட்ட பயிற்சியை பெற்றிருக்க வேண்டும்.

என்.எம்.சி (சி.ஆர்.எம்.ஐ) ஒழுங்கு விதிமுறைகள், 2021

ஒழுங்குமுறைகள்	வழிவகைகள்
அட்டவணை- II **2.** வெளிநாட்டு மருத்துவ பட்டதாரிகள்	(அ) தேசிய மருத்துவ ஆணையம் (வெளிநாட்டு மருத்துவ பட்டதாரிகள் உரிமம்) விதிமுறைகள், 2021 -ன் கீழ் கட்டுப்படுத்தப்பட்டபடி, இந்தியாவில் மருத்துவம் செய்ய நிரந்தரப் பதிவு பெற விரும்பும், அனைத்து வெளிநாட்டு, மருத்துவ பட்டதாரிகளும், இந்திய மருத்துவ பட்டதாரிகளுக்கு இணையான பயிற்சியை பெற்றிருக்க வேண்டும். (i) அனைத்து வெளிநாட்டு மருத்துவ பட்டதாரிகளும், வேறுவிதமாக அறிவிக்கப்படாத வரையில், நெக்ஸ்ட் செயல்பாட்டிற்குப் பின்னிட்டு தேசிய வெளியேறும்

	சோதனை படி I-க்குப் பிறது, இந்திய மருத்துவப் பட்டதாரிகளுக்கு இணையாக சி.ஆர்.எம்.ஐ-க்கு உட்படுத்தப்பட வேண்டும். (ஆ).... (இ) இந்திய மருத்துவப் பட்டதாரிகளுக்கு சி.ஆர்.எம்.ஐ வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவக் கல்லூரிகள் அல்லது நிறுவனங்களில் மட்டுமே பயிற்சிக் காலத்தை முடிக்க வேண்டிய வெளிநாட்டு மருத்துவப் பட்டதாரிகள் அவ்வாறு செய்ய வேண்டும். (i) புதிதாக திறக்கப்பட்ட மற்றும் இன்னும் அங்கீகரிக்கப்படாத கல்லூரிகளில் வெளிநாட்டு மருத்துவ பட்டதாரிகளை முதலில் நியமிக்கலாம்.

8. உரிம விதிமுறைகள், 2021-ன் சில விதிகளுக்கு மேல் முறையீட்டாளரின் எதிர்ப்புகள் பின்வரும் அடிப்படையில் அமைந்துள்ளது.

(i) குடிமக்கள் தரமான மருத்துவ சிகிச்சை பெறுவதை பழுதாக்கும் வகையில் விதிமுறைகள் 4(a)(i), 4(a)(ii), 4(b) மற்றும் 4(c) ஆகியவை பிரிவு 21-ல் உள்ளார்ந்த உரிமையான ஆரோக்கியத்திற்கான உரிமை மீறலாக உள்ளது;

(ii) சட்டத்தின் பிரிவு 15 (4) உடன் இணைந்த பிரிவு 57-ன் படி உள்ள அதிகாரத்தின்படி இந்த எதிர்க்கப்பட்ட ஒழுங்கு விதிமுறைகள் வழங்கப்படுகின்றன. ஆனால் இந்த வழிவகைகள் அத்தகைய விஷயங்களைப் பற்றிய விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை உருவாக்குவதற்கான அதிகாரத்தை வழங்கவில்லை;

(iii) ஒழுங்குவிதிமுறை 4(a) (i)-ன் கீழ், வெளிநாட்டு மருத்துவப் படிப்பு 54 மாதங்களாக இருக்க வேண்டுமென்ற பட்சத்தில், 54 மாத காலப் படிப்பை வழங்கும் கல்வி நிறுவனங்களை மட்டுமே தேர்வு செய்ய மாணவர்களுக்கு இருக்கும் தேர்வை கட்டுப்படுத்தப்படுகிறது.

எவ்வாறாயினும், இளங்கலை பட்டதாரி மருத்துவ படிப்பிற்கு, 54 மாதங்களுக்கும் குறைவான கால அளவை ஏற்கனவே என்.எம்.சி சட்டத்தின் பிரிவு 36(4) -ல் அங்கீகரித்துள்ளது.

(iv) ஒழுங்குமுறை விதிகள் 4(a) (ii)- ஆனது ஒரு வெளிநாட்டு மருத்துவ பட்டதாரி அதே வெளிநாட்டு மருத்துவ நிறுவனத்தில் குறைந்தபட்சம் 12 மாதங்களுக்கு பயிற்சி பெறுவதை கட்டாயமாக்குகிறது மற்றும் விதிமுறைகள் 4(b)-ஆனது அந்த பட்டதாரி தனக்கு பட்டம் வழங்கப்பட்ட நாட்டின் அந்தந்த தொழில் சார்ந்த ஒழுங்குமுறை அமைப்பில் பதிவு செய்திருக்க வேண்டும் என்பவை வெளிநாட்டிற்கு அப்பாற்பட்ட சட்டங்களை உருவாக்குவதற்கான தெளிவான எடுத்துக்காட்டுகள் ஆகும்.

(v) ஒழுங்குமுறை விதி 4(c) -ன் படி வெளிநாட்டு மருத்துவ பட்டதாரிகள் இந்தியாவிலும் குறைந்தபட்சம் 12 மாதங்களுக்கு மேற்பார்வையின் கீழ் பயிற்சி பெறுவதை வேண்டுவது, மாணவர்களுக்கு தேவையற்ற சிரமங்களை ஏற்படுத்துகிறது, ஏனெனில் அவர்கள் வெளிநாட்டிலும் தாய் மண்ணிலும் என இரண்டு பயிற்சிகள் மேற்கொள்ள நேரிடுகிறது.

(vi) ஒழுங்கு விதிமுறை 4(b) வேறொரு நாட்டின் குடியேற்றக் கொள்ளைக்குள் அத்துமீறி, மாணவர்களுக்கு அந்தந்த அதிகார வரம்பில் மருத்துவ பயிற்சி செய்ய உரிமம் வழங்க தகுதியுள்ள தொழில் சார்ந்த ஒழுங்குமுறை அமைப்பில் பதிவு செய்ய வேண்டிய கடமையை விதிக்கிறது;

(vii) எதிர்ப்புக்குள்ளான விதிமுறைகள், மருத்துவ பயிற்சி செய்யும் உரிமையின் மீது கராணமற்ற கட்டுப்பாடுகளை விதித்து, மேலும் நாட்டுக்கு அதிகமான மருத்துவர்களின் தேவை இருப்பினும், அவை பொது நல சேவையை செய்வதில்லை.

(viii) இந்த ஒழுங்குமுறைகளால் விதிக்கப்படும் காரணமற்ற கட்டுபாடுகள் இந்த நாட்டிலிருந்து அறிவுடையோரை அயலகம் செல்ல வழிவகுக்கும்.

(ix) இந்த எதிர்ப்புக்குரிய விதிமுறைகளால், முழு பாடத்திட்டம் முதல் மருத்துவ பயிற்சியாளாராக பதிவு செய்யும் நிலை வரையிலான சராசரி காலம், இந்திய மருத்துவப் பட்டதாரிகளுக்கு வெறும் 5½ ஆண்டுகள் தான் என்றாலும், வெளிநாட்டு மருத்துவப் பட்டதாரிகளுக்கு 8-9 வருடங்களாக அதிகரிகப்படுகின்றது. நவீன மருத்துவம் அல்லது அலோபதி முறை உலகம் முழுவதும் ஒரே மாதிரியாக இருப்பதாலும், நாட்டுக்கு நாடு வேறுபட முடியாது என்பதாலும், மாணவர்களை இந்தியாவில் படிப்பவர்கள், வெளிநாட்டில் படிப்பவர்கள் என இரு வகையாகப் பிரிப்பது என்பது, வகுமுறை கூறு 14 -க்கு எதிரானது.

9. சி.ஆர்.எம்.ஐ ஒழுங்குமுறைகள், 2021 என்ற இரண்டாவது தொகுப்பு ஒழுங்கு விதிமுறைகளுக்கு மேல்முறையீடு செய்பவரின் எதிர்ப்புகள் பின்வரும் அடிப்படையில் உள்ளது;

(i) அட்டவணை II பத்தி 2(அ) (i) -ன் படி அனைத்து வெளிநாட்டு மருத்துவ பட்டதாரிகளும் இந்திய மருத்துவ பட்டதாரிகளுக்கு இணையாக பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். ஆனால், இந்திய மருத்துவ பட்டதாரிகளுக்கு இணையாக வெளிநாட்டு மருத்துவ பட்டதாரிகளை விதிமுறைகள் நடத்துவதில்லை. எனவே, இதில் இருவேறுபாடுகள் அமைந்துள்ளது. உக்ரைன், ஜார்ஜியா, நேபாளம், பங்களாதேஷ், ஆர்மீனியா, பிலிப்பைன்ஸ் மற்றும் மலேசியா போன்ற பல நாடுகள் கட்டாய பயிற்சி இல்லாத முதன்மை மருத்துவத் தகுதியை வழங்குகின்றன. மொரிஷியஸ் போன்ற நாடுகளில் உள்ள மருத்துவ நிறுவனங்கள் தங்கள் வெளிநாட்டு மாணவர்களுக்கு, அவர்களது தாய் நாட்டில் கட்டாய சுழல்முறை மருத்துவப் பயிற்சியைச் செய்வதற்கான விருப்பத்தை வழங்குகின்றன. ஆனால் அட்டவணை II-ன் கீழ் உள்ள ஒழுங்குமுறைகள் மாணவர்களுக்கான இந்த வாய்ப்புகளை இழக்கச் செய்கிறது.

(ii) பத்தி 2(c) (i)-ல் பட்டியல் II ஆனது புதிதாக திறக்கப்பட்ட மற்றும் இன்னும் அங்கீகரிக்கப்படாத கல்லூரிகளில் வெளிநாட்டு மருத்துவ பட்டதாரிகளை முதலில் நியமிக்க அனுமதிக்கிறது. மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகி விடும் என்பதால், இது வெளிநாடுகளில் மருத்துவக் கல்வியைத் தொடர்வதில் இருந்து மாணவர்களை விலக்கி வைக்கும்.

10. ஆனால், மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் எதிர்ப்புகளின் எந்த அடிப்படையும் சட்டத்தில் நிலையானது என்று எங்களால் கருத இயலாது. மேல்முறையீட்டாளரால் எதிர்க்கப்பட்ட விதிமுறைகள் மேலோட்டமாக கடுமையானதாகவோ அல்லது அந்த கடினமானதாகவோ தோன்றலாம். ஆனால் இந்த ஒழுங்கு விதிமுறைகள், (i) கடந்த கால அனுபவம் மற்றும் (ii) நேரத்தின் அவசியம் குறித்த விளைவாகும். அதீத லட்சியமுடைய பெற்றோர்கள், மகிழ்ச்சியற்ற குழந்தைகள், சுரண்டல் மற்றும் நேர்மையற்ற (மற்றும் சில சமயங்களில் படிப்பறிவில்லாத) உள்கட்டமைப்பு - குறைபாடுகள் உள்ள கல்வி நிறுவனங்களின், தோற்றுனர்கள், முடங்கிய ஒழுங்குமுறை அமைப்புகள் மற்றும் தவறான அனுதாபத்துடன் உள்ள நீதிமன்றங்கள் ஆகியவை கல்வி வணிகமயமாக்கலுக்கும், கல்வித் துறையில், பொது மற்றும் குறிப்பாக மருத்துவக் கல்வியின் தரநிலைகள் வீழ்ச்சியடைவதற்கும் (அதே வரிசையில் அவசியமில்லை) பங்களிக்கின்றன என்று கல்வித் துறையில் உள்ள வல்லுநர்கள் (நியாயமாக) நம்புகின்றனர். இந்தியாவில் வெளிநாட்டு மருத்துவ பட்டங்களை அங்கீகரிப்பது மற்றும் பதிவு செய்வதை ஒழுங்குபடுத்துவதற்கான சட்டப்பூர்வ நடவடிக்கைகளின் பரிணாம வளர்ச்சியின் வரலாற்றைப் பார்த்து அதை நாம் பாராட்டலாம்.

11. அங்கீகரிக்கப்படாத நிறுவனங்களால் மருத்துவத்தில் வழங்கப்படும் பட்டயப்படிப்புகள்/பட்டங்கள் மற்றும் பயிற்சி பெறாத நபர்கள் மருத்துவம் செய்வது போன்ற கடினமான நிலை புதிதல்ல, ஆனால் அது இந்தியாவில் ஒரு நூற்றாண்டு கால பழமையான நிகழ்வு ஆகும். இவற்றை, மேற்கத்திய மருத்துவ அறிவியலில் தகுதிகளைக் குறிக்கும் பட்டங்களை வழங்குவதை ஒழுங்குபடுத்துவதற்கான முதல் முயற்சியை ஒரு மேன்மை பொருந்திய சட்டமான, இந்திய மருத்துவ பட்டங்கள் சட்டம், 1916 ன் கீழ் மேற்கொள்ளப்படுவதிலிருந்து காணமுடியும். பிரிட்டிஷ் இந்தியாவின் பெரிய மாகாணங்களை பம்பாய், வங்காளம் மற்றும் மெட்ராஸ் மாகாணங்களில் உள்ளாட்சி மன்றங்களின் சட்டங்கள் இருந்தபோதிலும், அவை பயனற்று காணப்பட்டன. எனவே, இந்திய மருத்துவ பட்டங்கள் சட்டம், 1916-ன் பொருண்மைகள் மற்றும் காரணங்களின் அறிக்கை பதியப்படுகிறது.

> "..... தற்போது, பயிற்சி பெறாத அல்லது போதிய பயிற்சி பெறாத நபர்களுக்கு பட்டயங்கள் வழங்கப்படுவதை காண முடிகிறது, மற்றும் இதுபோன்ற பல பட்டயங்கள் அங்கரீக்கப்பட்ட பல்கலை கழகங்கள் மற்றும் பெரு நிறுவனங்களால் வழங்கப்படும் நிற பிரதிபலிப்புகளாகும். இதன் விளைவாக, அத்தகைய டிப்ளோமாக்களைப் பெறுபவர்கள் தங்களிடம் இல்லாத மருத்துவம் மற்றும் அறுவைசிகிச்சைத் தகுதிகளைப் பெற்றிருப்பதாக பொதுமக்களிடம் காட்டிக் கொள்ள முடிகிறது..."

12. அதைத் தொடர்ந்து, இந்தியாவில் மருத்துவ கவுன்சிலை அமைப்பதற்கான சட்டம், இந்திய மருத்துவ கவுன்சில் சட்டம், 1933 என்ற தலைப்பில் இயற்றப்பட்டது. இந்தச் சட்டத்தின் முன்னுரையில் கூறப்பட்டுள்ளபடி, இந்தியாவில் மருத்துவக் கவுன்சிலை உருவாக்குவதன் நோக்கமானது, அனைத்து மாகாணங்களுக்கும் மருத்துவத்தில் சீரான

குறைந்தபட்ச தரநிலையில், உயர் தகுதியை அமைப்பதாகும். இந்தச் சட்டம் மருத்துவத் தகுதிகளை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கின்றது. அவை,

(i) முதல் அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள; மாநிலங்களில், உள்ள மருத்துவ நிறுவனங்களால் வழங்கப்பட்டவை; (ii) முதல் அட்டவணையில் சேர்க்கப்படாத மாநிலங்களில் உள்ள மருத்துவ நிறுவனங்களால் வழங்கப்பட்டவை; மற்றும் (iii) அந்த மாநிலங்களுக்கு வெளியே உள்ள மருத்துவ நிறுவனங்களால் வழங்கப்பட்டவைகள் ஆகும்.

13. 1933, சட்டத்தின் முதல் அட்டவணையில், இந்திய பல்கலைக்கழங்களும், இரண்டாவது அட்டவணையில் ஐக்கிய இராஜ்ஜியம்(யுனைடட் கிங்டம்), ஆஸ்திரேலியா, பர்மா, கனடா போன்ற நாடுகளில் உள்ள நிறுவனங்களும் சேர்க்கப்பட்டுள்ளது. ஹைதாராபாத்தின் ஓஸ்மானியா பல்கலைக்கழகமானது, ஹைதாராபாத் பிரிட்டிஷ் இந்தியாவின் ஒரு பகுதியாக இல்லாத நேரத்திலும், இரண்டாவது அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளது என்பதை ஆர்வமாக கவனத்தில் கொள்ள வேண்டும். 1933 சட்டத்தின் பிரிவு 12 ஆனது இரண்டாம் அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள நாடுகளின் பல்கலைக்கழங்களிலிருந்து பெறப்பட்ட மருத்துவத் தகுதிகளுக்கு தன்னியக்கமுள்ள அங்கீகாரத்தை வழங்கியது.

14. இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு, இந்திய மருத்துவ கவுன்சில் சட்டம், 1956 நிறைவேற்றப்பட்டு, 01.11.1958 அன்று நடைமுறைக்கு வந்தது. இந்த சட்டம் இந்திய மருத்துவ கவுன்சில் சட்டம், 1933- ஐ நீக்கம் செய்தது. இந்த சட்டம் இந்திய மருத்துவ கவுன்சிலை மறுசீரமைப்பதற்கும், இந்தியாவிற்கான மருத்துவ பதிவேட்டை பராமரிப்பதற்கும் மற்றும் அதனுடன் தொடர்புடைய பிற விஷயங்களுக்கும் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

15. பொருண்மைகள் மற்றும் காரணங்களின் விவர அறிக்கையானது, அந்தச் சட்டத்தின் நோக்கத்தை காண்பிக்கிறது. (i) அந்த நேரத்தில் அங்கீகரிக்கப்படாத வெளிநாட்டு மருத்துவத் தகுதிகளைப் பெற்ற இந்திய குடிமக்களின் பெயர்களைப் பதிவு செய்வதற்கு வழங்குதல் மற்றும் (ii) இந்தியாவிற்கு வெளியே உள்ள நாடுகளில் உள்ள ஒத்த இசைவு தன்மை திட்டமில்லாத மருத்துவ நிறுவனங்களால் வழங்கப்படும் மருத்துவத் தகுதிக்களுக்கான தற்காலிக அங்கீகாரத்தை வழங்குதல் உள்ளிட்டவைகள் ஆகும்.

16. 1956 சட்டத்தின் பிரிவு 11 ஆனது, இந்தியாவில் உள்ள பல்கலை கழங்கங்கள் அல்லது மருத்துவ நிறுவனங்களால் வழங்கப்படும் மருத்துவ தகுதிகளை அங்கீகரிப்பதற்கான விதிகளைக் கொண்டுள்ளது. மேற்படி சட்டத்தின் முதல் அட்டவணையில், இந்தியாவில் உள்ள பல்கலை கழகங்கள் மற்றும் மருத்துவ நிறுவனங்களின் பட்டியல் மற்றும் அவைகள் மூலம் வழங்கப்பட்டு பிரிவு 11(1)-ன் கீழ் அங்கீகரிக்கப்பட வேண்டிய மருத்துவ தகுதிகளின் பட்டியலை கொண்டுள்ளது. பிரிவு 11 (2) ஆனது முதல் அட்டவணையில் சேர்க்கப்படாத இந்தியாவில் உள்ள பல்கலை கழகங்கள் மற்றும் மருத்துவ நிறுவனங்களை கையாளுகிறது.

17. பிரிவு 12 ஆனது ஒத்த இசைவு திட்டம் கொண்ட நாடுகளில் உள்ள மருத்துவ நிறுவனங்களால் வழங்கப்படும் மருத்துவ தகுதிகளை அங்கரீப்பதற்கான விதிமுறைகளைக் கொண்டுள்ளது. அத்தகைய மருத்துவ நிறுவனங்கள் இரண்டாவது அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளன.

18. முதல் அட்டவணை அல்லது இரண்டாவது அட்டவணையில் சேர்க்கப்படாத ஆனால் மூன்றாவது அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள மருத்துவ நிறுவனங்களால் வழங்கப்படும் மருத்துவ தகுதிகளை அங்கரீப்பதற்காக பிரிவு 13- ஆனது வழங்கப்பட்டுள்ளது.

மூன்றாவது அட்டவணையானது இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது. இரண்டாவது அட்டவணையில் சேர்க்கப்படாத இந்தியாவிற்கு வெளியே உள்ள மருத்துவ நிறுவனங்களால் வழங்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ தகுதிகளின் பட்டியலை மூன்றாம் அட்டவணையின் பகுதி (II) ஆனது கொண்டுள்ளது.

19. இந்திய மருத்துவ கவுன்சில் சட்டம், 1956-ன் பிரிவு 13-ன் உட்பிரிவு மூன்று ஆனது பகுதி (II) மூன்றாம் அட்டவணையின் கீழ் சேர்க்கப்பட்டுள்ள இந்தியாவிற்கு வெளியே உள்ள மருத்துவ நிறுவனங்களால் வழங்கப்பட்ட மருத்துவ தகுதிகளை அங்கீகரிக்கப்பதற்காக வழங்கப்பட்டுள்ளது. அத்தகைய தகுதிகளை கொண்ட நபர் மருத்துவ பதிவேட்டில் பதிவு செய்யும் போது அவர் இந்திய குடிமகனாக இருப்பதோடு, அத்தகைய தகுதியை வழங்கும் நாட்டில் உள்ள விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளால் வேண்டப்படும் நடைமுறை பயிற்சியை பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்படுத்தப்படுகிறது. அவர் அந்த நாட்டில் நடைமுறை பயிற்சியை பெறவில்லை என்றால் சட்டத்தின் கீழ் பரிந்துரைக்கப்படும் நடைமுறை பயிற்சியை பெறவேண்டும்.

20. இந்திய மருத்துவ ஆணையத்தின் ஆலோசனைக்கு பின், இரண்டாவது அட்டவணையில் சேர்க்கப்படாத, இந்தியாவிற்கு வெளியே உள்ள மருத்துவ நிறுவனம் வழங்கிய எந்த தகுதியையும் சேர்க்க 1956-ம் ஆண்டு சட்டம் முதலில் இயற்றப்பட்டபடி பிரிவு 13 (4)-ன் கீழ் மூன்றாம் அட்டவணையின் பகுதி (II) -யை திருத்துவதற்கு மத்திய அரசுக்கு வழிவகை செய்கிறது.

21. 1981-ம் ஆண்டில் இந்திய அரசு, எம்.சி.ஐ-யிடம் முந்தைய சோவியத் ரஷ்யாவில் உள்ள மருத்துவ நிறுவனங்களின் மருத்துவப் படிப்புகளுக்கு அங்கீகாரம் வழங்குவதை குறித்து சிந்திக்க கோரியபோது தான் மெய்யாகவே 1956-ம் ஆண்டு சட்டத்திற்கு சிரமங்கள் தொடங்கியது. மேலும் மருத்துவக் குழு கோரிக்கையை பரிசீலனை செய்து அறிக்கையை சமர்ப்பித்த பிறகு முந்தைய சோவியத் ஒன்றியத்தில் உள்ள ஒரு சில நிறுவனங்கள் அங்கீகரிக்கப்பட்டு சட்டத்தின் இரண்டாவது அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளது.

22. சோவியத் ஒன்றியத்தின் சிதைவிற்கு பிறகு, தெளிவற்ற நற்பெயரைக் கொண்ட நிறுவனங்கள் காளாங்களாக வளர்ந்தது, (ஆயினும், வீடு திரும்பிய பலருக்கு முன்நோக்கி செல்லும் வழியை காணப்படலாம்). 1994-ம் ஆண்டில் எம்.சி.ஐ-யை முந்தைய சோவியத் ரஷ்யாவின் அனைத்து மருத்துவ பட்டங்களை அங்கீகாரம் செய்வதை மறுத்து பரிந்துரைக்கும் படி கட்டாயப்படுத்தியது. ஆகஸ்ட் 1997-ல் வெளியிடப்பட்ட விளம்பரம் மூலம் எம்.சி.ஐ மாணவர்களை போதுமான வரையில் எச்சரித்தும், நிர்வாக குழு சில முடிவுகளையும் எடுத்தது, அந்த முடிவுகள் நவம்பர் மாதம் 1998-ல் நடைபெற்ற உயர்மட்ட குழுவின் கூட்டத்தின் மூலம் நீர்த்துபோக செய்யப்பட்டது. இறுதியில், இந்தியாவிற்கு திரும்பி வந்தவர்களுக்கு பின் பரிசோதனை செயல்முறைகளை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது மற்றும் அந்த நாடுகளில் உள்ள மருத்துவ நிறுவனங்களில் சேர்கை பெற விரும்புவோருக்கு முன் - பரிசோதனை முறையும் பரிந்துரைக்கப்பட்டது.

23. அந்த முடிவுகளை எதிர்த்து, முந்தைய சோவியத் ரஷ்யாவின் மருத்துவ கல்லூரியில், மருத்துவ படிப்புகளை படித்தவர்கள் வெவ்வேறு உயர்நீதிமன்றங்ளில் நீதிபேராணை மனுக்களை தாக்கல் செய்தனர். இந்நிலையில், டெல்லி உயர்நீதிமன்றம் முன்னோடியாக இருந்து, முதன் முதலாக விண்ணப்பதாரர்களுக்கு பரிகாரங்களை வழங்கியது.

இந்த விவகாரம், இந்நீதிமன்றத்தை எட்டிய போது, சில பரிந்துரைகள் செய்யப்பட்டு, எம்.சி.ஐ-ன் பொதுக் குழுவானது 31.03.2000 அன்று கூடி சில தீர்மானங்களை நிறைவேற்றியது.

24. நிர்வாக முடிவுகளை நடைமுறைப்படுத்தவதற்காக, இந்திய அரசு, மார்ச் 2001-ம் ஆண்டில், 1956-ம் ஆண்டு சட்டத்தின் திருத்திற்கான மசோதாவை அறிமுகப்படுத்தியது. மசோதா நிறைவேற்றப்பட்ட பிறகு, சட்டத்தின் பிரிவு 13 திருத்தப்பட்டது. 2001-ம் ஆண்டில் இந்த திருத்தச் சட்டம் 34 மூலம், பிரிவு 13 -ன் உட்பிரிவு (4)-ன் கீழ் இரண்டு விதிகளும், ஒரு விளக்கமும் சேர்க்கப்பட்டுள்ளது. மேலும் பிரிவு13 (4) -ன் கீழ் உட்பிரிவுகள் (4a) (4b) மற்றும் (4c) ஆகியன கூடுதலாக சேர்க்கப்பட்டுள்ளன.

25. 2001-ம் ஆண்டின் 34 -வது சட்டத்தின் மூலம் பிரிவு 13 -ன் உட்பிரிவுகளான (4A) (4B) மற்றும் (4C) சேர்க்கப்பட்டு பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது;

(4 A) இந்தியாவின் குடிமகனாக இருக்கும் ஒரு நபர் இந்தியாவிற்கு வெளியே உள்ள ஏதேனும் ஒரு மருத்துவ நிறுவனம் வழங்கிய மருத்துவத் தகுதியைப் பெறுபவர், அந்த நாட்டில் மருத்துவப் பயிற்சியாளராகப் பதிவு செய்ய அங்கீகரிக்கப்பட்ட தேதிக்குப் பிறகு துணைப்பிரிவு (3)-ன் கீழ் மத்திய அரசால் குறிப்பிடப்பட்டுள்ள மாநில மருத்துவக் கவுன்சிலால் பராமரிக்கப்படும் எந்தவொரு மருத்துவப் பதிவேட்டிலும் பதிவுசெய்யவோ அல்லது இந்திய மருத்துவப் பதிவேட்டில் அவரது பெயரை பதிவு செய்யவோ தகுதியுடையவர் அல்ல, மாறாக, அவர் இந்தியாவில் மேற்படி நோக்கத்திற்காக நடத்தும் பரிசோதனைத் தேர்வில் தகுதி பெற்றிருக்கவேண்டும் அதோடு, அந்த நபரின், அத்தகைய வெளிநாட்டு மருத்துவத் தகுதியானது அந்த பரிசோதனையில் தகுதிபெற்ற பிறகு இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட மருத்துவத் தகுதியாகக் கருதப்படும்.

(4 B) இந்தியக் குடிமகனாக இருக்கும் ஒருவர், உட்பிரிவு (3)-ன் கீழ் மத்திய அரசால் குறிப்பிடப்படும் தேதிக்குப் பிறகு, குழுமத்தால் தகுதிச் சான்றிதழ் பெறாமல், எந்த ஒரு வெளிநாட்டு மருத்துவ நிறுவனத்தால் வழங்கப்படும் மருத்துவத் தகுதியைப் பெறுவதற்கான சேர்க்கைக்கு தகுதி பெறமாட்டார். அந்த தகுதிச் சான்றிதழைப் பெறாமல் அத்தகைய தகுதியைப் பெற்றிருந்தால், அவர் உட்பிரிவு (4A)-ல் குறிப்பிடப்பட்டுள்ள பரிசோதனை தேர்வில் தோன்ற தகுதி பெறமாட்டார்.

இருப்பினும், இந்திய குடிமகனான ஒருவர், வெளிநாட்டு மருத்துவ நிறுவனத்தில் மருத்துவத் தகுதியைப் பெற்றிருந்தால் அல்லது வெளிநாட்டு மருத்துவ நிறுவனத்தில் இந்திய மருத்துவ குழுவின் (திருத்தம்) சட்டம், 2001-க்கு முன்பே சேர்க்கைக்கு அனுமதிக்கப்பட்டிருந்தால், அவர் இந்தச் சட்டத்தின் உட்பிரிவின் கீழ் தகுதிச் சான்றிதழைப் பெற வேண்டிய அவசியமில்லை. ஆனால், இந்தியாவில் உள்ள எந்த மருத்துவ நிறுவனத்திலும் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவத் தகுதிக்கான ஏதேனும் மருத்துவப் படிப்பில் சேர்வதற்குத் தகுதி பெற்றிருந்தால், அவர் எந்தவொரு மாநில மருத்துவப் பதிவேட்டில் பதிவு செய்வதற்கும் அல்லது இந்திய மருத்துவப் பதிவேட்டில் அவரது பெயரை உள்ளிடுவதற்கும் பரிந்துரைக்கப்பட்ட பரிசோதனை தேர்வில் மட்டுமே அவர் தகுதி பெறவேண்டும்.

(4C) உட்பிரிவுகள் (4A) மற்றும் (4B) ஆகியவற்றில் உள்ள எதுவும் அந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக பிரிவு 14-ல் குறிப்பிடப்பட்டுள்ள மருத்துவத் தகுதிகளுக்குப் பொருந்தாது.

26. மேற்கூறிய விதிகளில் இருந்து பார்த்தால், பிரிவு 13-ன் உட்பிரிவுகள் (4A) மற்றும் (4B) இரண்டும் வெவ்வேறு கால கட்டங்களில், அதாவது படிப்பிற்கான சேர்க்கைக்கு முன்னும், படிப்பை முடித்த பின்னும் என்று செயல்படுகின்றன. ஏதேனும் வெளிநாட்டில் உள்ள ஏதேனும் மருத்துவ நிறுவனத்தில் சேர்க்கை பெறுவதற்கு முன் ஒரு விண்ணப்பதாரர் பெற வேண்டிய

தகுதிச் சான்றிதழைப் பற்றி உட்பிரிவு (4B) கூறுகிறது, உட்பிரிவு (4A) ஆனது ஏதேனும் மருத்துவ பதிவேட்டில் பதிவு செய்வதற்கு இந்தியாவில் இருக்கும் பரிசோதனை தேர்வில் தேர்ச்சி பெறுவது அவசியம் என்பது பற்றியும் குறிப்பிடுகிறது.

27. உட்பிரிவுகள் (4A) மற்றும் (4B) சேர்க்கப்பட்ட பிறகுதான், இரு விதிமுறைகளின் தொகுப்புகள் இடம் பெற்றது. ஒன்று "2002-ல் வெளிநாட்டு மருத்துவ நிறுவன விதிமுறைகளில் இளங்கலை மருத்துவ கல்வியில் சேருவதற்கான தகுதித் தேவைகள்", மற்றொன்று "பரிசோதனை தேர்வு விதிமுறைகள், 2002".

28. 2002, பரிசோதனை தேர்வு விதிமுறைகளின் 3 மற்றும் 4 விதிமுறைகள் பின்வருமாறு குறிப்பிடுகிறது;

"3. இந்தியாவுக்கு வெளியே உள்ள ஏதேனும் மருத்துவ நிறுவனமும் வழங்கிய முதன்மை மருத்துவத் தகுதியைப் பெற்ற இந்தியக் குடிமகன் அல்லது இந்தியக் குடியுரிமை பெற்றவர், 15.03.2002 அல்லது அதற்குப் பிறகு இந்திய மருத்துவக் குழு அல்லது மாநில மருத்துவக் குழுவில் தற்காலிக அல்லது நிரந்தரப் பதிவைப் பெற விரும்பினால், 2002 சட்டத்தின் பிரிவு 13-ன் விதிகளின்படி அந்த நோக்கத்திற்காக பரிந்துரைக்கப்பட்ட அதிகாரியால் நடத்தப்படும் பரிசோதனை தேர்வுக்குத் தகுதி பெற வேண்டும்.

இருப்பினும் நிரந்தர பதிவைக் கோரும் நபர், அவன்/அவள், அத்தகைய தகுதியை அவரது தற்காலிக பதிவிற்கு முன்பே பெற்றிருந்தால், அவர் பரிசோதனைக்கு தகுதி பெற வேண்டியதில்லை.

4. தகுதிக்கான அளவுகோல்கள்:

கீழ்க்கண்ட காரணங்களை தவித எந்தவொரு நபரும் பரிசோதனை தேர்வில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்:

(1) **அவன்/அவள் இந்தியக் குடிமகனாகவோ அல்லது இந்தியக் குடியுரிமை பெற்ற, சம்பந்தப்பட்ட இந்தியத் தூதரகத்தால் உறுதிசெய்யப்பட்ட எந்தவொரு முதன்மை மருத்துவத் தகுதியையும் பெற்று, அத்தகைய தகுதியை வழங்கும் நிறுவனம் அமைந்துள்ள நாட்டில் மருத்துவப் பயிற்சியாளராக சேர்வதற்கான தகுதி அங்கீகரிக்கப்பட்டிருந்தலே தவிர எந்தவொரு நபரும் பரிசோதனை தேர்வில் தோன்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.**

(2) **'வெளிநாட்டு மருத்துவ நிறுவனங்களில் இளங்கலை மருத்துவப் படிப்பில் சேர்வதற்கான தகுதித் தேவைகள், விதிமுறைகள் 2002'-ன் கீழ் அவன்/அவள் இந்திய மருத்துவக் குழுவிடமிருந்து 'தகுதிச் சான்றிதழை' பெற்றிருக்க வேண்டும். மார்ச் 15 2002-க்கு முன் வெளிநாட்டு மருத்துவ நிறுவனங்களில் மருத்துவத் தகுதிகளைப் பெற்ற அல்லது வெளிநாட்டு மருத்துவ நிறுவனங்களில் சேர்க்கை பெற்ற இந்திய குடிமக்கள் அல்லது வெளிநாட்டு இந்திய குடிமக்களுக்கு இந்த தேவை வேண்டியதில்லை.**

(3) **அவன்/அவள் தனது மருத்துவ கல்வியை தான் பட்டம் பெற்ற வெளிநாட்டில் அமைந்துள்ள அதே கல்வி நிறுவனத்தில் முழு காலவரையில் மருத்துவப் படிப்பை பயின்றிக்க வேண்டும்.**

ஆயினும், போர், உள்நாட்டுக் கலவரம், கிளர்ச்சி, உள்நாட்டு போர் அல்லது இந்திய குடிமகனின் வாழ்க்கை நெருக்கடியான சூழ்நிலைகள் குறித்து மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டு, அந்த நாட்டில் உள்ள இந்திய தூதரகம் மூலம் அத்தகைய தகவல்கள் பெறப்பட்டால், அத்தகைய தொடர்புகளை பெற்ற இந்திய தூதரகம் அமைந்துள்ள அதே வெளிநாட்டு நிறுவனங்களில் வழங்கப்படும் மருத்துவ கல்வியை குழுமம் தளர்த்தும்.

(4) இருப்பினும், தற்காலிக அல்லது நிரந்தர பதிவை கோரும் ஒருவர், ஆஸ்திரேலியா/கனடா/ நியூசிலாந்து/யுனைடெட் கிங்டம்/ யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆஃப் அமெரிக்காவில் இருந்து மருத்துவ தகுதியை பெற்றிருந்தால் அவன்/அவள், பரிசோதனை தேர்வில் தகுதி பெற வேண்டியதில்லை. அதோடு அத்தகைய தகுதியை பெற்றிருப்பவர் ஆஸ்திரேலியா/கனடா/நியூசிலாந்து/யுனைடெட்கிங்டம்/யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆப் அமெரிக்காவில் முதுகலை மருத்துவத் தகுதி வழங்கப்பட்டு, அந்த நாட்டில் மருத்துவப் பயிற்சியாளராக பதிவு செய்ய அங்கீகாரம் பெறுகிறார்.

29. மேற்கண்ட இரண்டு விதிமுறை தொகுப்புகளும் எம்.சி.ஐ-ல் 18.02.2002 அன்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஒழுங்குமுறை விதிகள் நடைமுறைக்கு வரும் தேதி 15.03.2002 என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, டெல்லி உயர்நீதிமன்றம் மற்றும் அலகாபாத் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புகளின் மீதான மேல்முறையீடுகள் இந்த நீதிமன்றத்தால், **இந்திய மருத்துவக் குழு எதிர் இந்திய ரஷ்ய நல வாழ்வு சங்கங்களில் உள்ள இந்திய மருத்துவர்கள் மற்றும் பலர்** [1] என்ற வழக்கில் வழங்கப்பட்ட உத்தரவின் படி தள்ளுபடி செய்யப்பட்டது.

---

[1](2002) 3 எஸ்.சி.சி 696

30. எவ்வாறாயினும், 1994 அல்லது 1995 அல்லது 1996 அல்லது 1999 அல்லது 2000-ன் பாடத்திட்டத்தில் சேர்ந்த மாணவர்கள், அரசமைப்பின் 32-வது பிரிவின் கீழ் இந்த நீதிமன்றத்தின் கோப்பிற்கு தாக்கல் செய்த ஒரு தொகுப்பு நீதி பேராணை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட நிகழ்வின் மூலம் மற்றொரு சுற்று வழக்குகள் தொடங்கியது. இந்த மனுதாரர்களின் எதிர்ப்புகள் அனைத்தும் பரிசோதனை தேர்வு விதிமுறைகள், 2002 சம்மந்தப்பட்டவையாகும். ஆனால்,

சஞ்சீவ் குப்தா எதிர் யூனியன் ஆஃப் இந்தியா [(2)] என்ற தீர்ப்பின் மூலம் இந்நீதிமன்றம் அந்த எதிர்ப்புகளை நிராகரித்தது.

———

[2](2005)1 எஸ்.சி.சி 45

31. ஏப்ரல் 2010-ல், எம்.சி.ஐ இது இதிகாச விதிதாச்சாரத்தின் பழிப்பிற்கிடமான மோசடியால் உலுக்கப்பட்டது, 15.05.2010 அன்று இந்திய மருத்துவ கவுன்சில் (திருத்தம்) கட்டளைகள், 2010 பிரகடனம் செய்து இந்திய மருத்துவக் கவுன்சிலை முறியடித்து ஆளுநர் குழுவை நியமிப்பதற்கு வழிவகுத்தது. அவசரச் சட்டம் 2010 திருத்தச் சட்டத்தால் மாற்றப்பட்டது. அதைத் தொடர்ந்து, இந்திய மருத்துவ கவுன்சில் (திருத்தம்) சட்டம், 2011, இந்திய மருத்துவ கவுன்சில் (திருத்தம்) சட்டம், 2012 மற்றும் இரண்டு அடுத்தடுத்த கட்டளைகளின் கீழ், இடைநிறுத்தம் அவ்வப்போது நீட்டிக்கப்பட்டது.

32. எம்.சி.ஐ ஒரு சர்ச்சையில் சிக்கிய அதே நேரத்தில், 16.04.2010 முதல் நடைமுறைக்கு வரும் வகையில், 2002 பரிசோதனை தேர்வில் விதிமுறைகளின் 4 வது விதியில் திருத்தம் செய்யப்பட்டது. ஒரு வெளிநாட்டு மருத்துவ பட்டதாரி, பரிசோதனை தேர்வில் கலந்துகொள்ள தகுதி பெற, வெளிநாட்டில் உள்ள அதே நிறுவனத்தில் தனது முழு மருத்துவப் படிப்பையும் முடித்திருக்க வேண்டும் என்று திருத்தம் செய்யப்பட்டது. இந்தத் திருத்தத்தின் காரணமாக, இளங்கலை பட்டதாரி மருத்துவக் கல்வியை ஓரளவு ஒரு வெளிநாட்டிலும், ஒரு பகுதி மற்றொரு வெளிநாட்டிலும் படித்த மாணவர்கள் பரிசோதனை தேர்வில் பங்கேற்கத் தகுதியற்றவர்களாக ஆக்கப்பட்டனர்.

33. எனவே, பரிசோதனை தேர்வு விதிமுறைகளின் திருத்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களில் சிலர், 16.04.2010 முதல் அமலுக்கு வந்த திருத்தப்பட்ட பரிசோதனை தேர்வு

விதிமுறைகள் 2002-ன் விதிமுறை 4(3) ஐ எதிர்த்து அந்த சட்டத்தின் விதிமுறைகள் வரம்பிற்கு மீறியதே என குறிப்பிட்டு டெல்லி உயர் நீதிமன்றத்தின் கோப்பில் ஒரு தொகுப்பு நீதி பேராணை மனுக்களை தாக்கல் செய்தனர். தில்லி உயர் நீதிமன்றத்தின் நீதியராயம், 27.09.2013 தேதியிட்ட **ரோஹித் நரேஷ் அகர்வால் எதிர் யூனியன் ஆஃப் இந்தியா**[3] என்ற தீர்ப்பின் மூலம், பிரிவு 13-ன் உட்பிரிவுகள் (4 A) மற்றும் (4B) ஆகியவற்றில் சட்டம் இயற்றும் கொள்கை பிரதிபலிப்பதாகவும் மற்றும் பிரிவு 33 -ன் கூறு (ma)-வின் கீழ் பெறப்படும் அதிகாரத்தின் வரம்புகளால், 2010 விதிமுறைகளால் திருத்தப்பட்ட விதிமுறை 4(3) என்ற விதியின்படி, சட்டத்தின் தீவிரத்தை மீறுவதாக அறிவித்தது.

---

[3] (2013) 204 டி.எல்.டி 401 (டி.பி)

34. டெல்லி உயர்நீதிமன்றத்தின் இந்த தீர்ப்புக்கு எதிராக இந்திய மருத்துவ குழு சிறப்பு அனுமதி மனுக்களை தாக்கல் செய்தது. அனுமதியளித்த பிறகு, பரிசோதனை தேர்வு விதிமுறை 4(3)-ஐ சட்டத்தின் வரம்பு மீறல் விளம்புகை செய்த உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பில் எந்த பிழையும் இல்லை என்று கூறி அந்த மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன.

35. பரிசோதனை தேர்வு விதிமுறைகளில் 2010 திருத்தத்திற்குப் பிறகு உடனடியாக, ஆனால் **ரோஹித் நரேஷ் அகர்வால் (மேல்குறிப்பிட்ட)** என்ற வழக்கில், டெல்லி உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு முன், இந்தியாவில் உள்ள அங்கீகரிக்கப்படாத மருத்துவக் கல்லூரியில் இளங்கலை மருத்துவப் படிப்பின் முதல் இரண்டு பருவங்களை முடித்து டான்சானியாவின் மருத்துவ நிறுவனத்தில் கடைசி பருவத்தை முடித்த மாணவர்களின் வழக்கை கையாள்வதற்கு இந்நீதிமன்றத்திற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. அந்த மாணவர்களின் குழுவில் (1) தற்காலிகப் பதவி நிராகரிக்கப்பட்ட மற்றும் இந்தியாவில் பயிற்சிகள்

முடியாத சிலர், (2) தற்காலிகப் பதிவு பெற்று, பயிற்சிகள் முடித்தவர்களது, ஆனால் நிரந்தரப் பதிவை மறுக்கப்பட்ட சிலர் மற்றும் (3) நிரந்தர பதிவுகள் பின்னர் ரத்து செய்யப்பட்ட சிலர் அடங்குவர். உயர்நீதிமன்றம் அவர்கள் அனைவருக்கும் பரிகாரம் வழங்கியது. மேலும் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு இந்நீதிமன்றத்தில் எதிர்ப்புக்குள்ளாகப்பட்டது. **இந்திய மருத்துவக் குழு எதிராக ஜே.சாய் பிரசன்னா மற்றும் பலர்** என்று வெளியான தீர்ப்பின் மூலம், [(4)] ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை இந்நீதிமன்றம் உறுதி செய்தது. அவ்வாறு செய்யும்போது, இந்நீதிமன்றம், "இந்தியாவுக்கு வெளியே உள்ள ஒரு நாட்டில் உள்ள மருத்துவ நிறுவனம் மருத்துவத் தகுதியை வழங்கியிருக்கும் வரையில், அந்த நாட்டில் மருத்துவப் பயிற்சியாளராகச் சேர்வதற்கு அத்தகைய மருத்துவத் தகுதி அங்கீகரிக்கப்படும் போது, இந்தியாவில் மருத்துவப் பதிவேட்டில் பதிவு செய்யும் நோக்கத்திற்காக இந்தியாவில் பரிசோதனை தேர்வு தகுதி பெற்றிருக்கவேண்டும்.

36. மிக முக்கியமாக, இந்நீதிமன்றம் பத்தி 12 ல் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

> "12. இந்தியாவிற்கு வெளியே உள்ள ஒரு மருத்துவ நிறுவனத்தில் மருத்துவத் தகுதியைப் பெற்ற நபர்களின் விஷயத்தில், படிப்பு எங்கு மேற்கொள்ளப்பட்டது என்ற கேள்வி பொருத்தமானதல்ல. கல்வி நெறிமுறைகள் அந்நாட்டில் இருக்கலாம் அல்லது அந்நாட்டின் மருத்துவ குழுவின் விதிமுறைகள் அனுமதித்தால் ஓரளவு அந்நாட்டிலும், ஓரளவு இந்தியா உட்பட வேறு நாட்டிலும் தொடரப்படலாம். அந்த நாட்டில் மருத்துவப் பயிற்சியாளராகப் பதிவு செய்யும் நோக்கத்திற்காக அந்த நாட்டில் உள்ள நிறுவனம், அந்த நாடு வழங்கிய மருத்துவத் தகுதியை அங்கீகரித்தவுடன், அத்தகைய மருத்துவப் பட்டதாரிகள் இந்தியாவில் பரிசோதனை தேர்வில் தேர்ச்சி பெற்றவுடன், இந்திய மருத்துவ குழுவானது மேற்கூறிய பட்டத்தை பெற்ற மாணவர்

வெளிநாட்டு நிறுவனங்களுக்காக தமது மருத்துவ பாடத்திட்டத்தின் ஒரு பகுதி கல்வியை மட்டுமே இந்தியாவில் உள்ள நிறுவனத்தில் தொடர்ந்தால் அத்தகைய பட்டத்தை நிராகரிக்க இயலாது.

---

[4](2011) 11 எஸ்.சி.சி 748

37. இவ்வாறு ஒழுங்குமுறை ஆணையம் ஒவ்வொரு முறையும், ஒரு சிலரால் ஏற்படுத்தப்பட்ட சிறுதுளைகளை அடைத்து, அந்த அமைப்பை சீர்திருத்த முயற்சிக்கும் போது, அது ஒரு சவாலாகவும், அதே சமயம் சட்டத்தின் நுணுக்கங்களில் பொறுப்பற்ற ஆராய்ச்சியை மேற்கொள்ளும் தவிர்க்க முடியாத தூண்டுதலாகவும் பலமுறை பயனற்றவையாகிறது. ஒரு சில மாணவர்களிடம் செல்லும் நோயாளிகளின் அவலநிலை அரிதாகவே வெளிச்சத்திற்கு வரும் என்பதையும், இதுபோன்ற முடிவுகள் மக்களிடம் ஏற்படுத்தும் தாக்கத்தை ஒருபோதும் அறிய இயலாது என்பதையும் உணர்ந்து சில நேரங்களில், நீதிமன்றங்கள் ஒரு சில மாணவர்களின் அவலநிலையைப் பார்த்து அனுதாபம் காட்டுகின்றன.

38. அது எப்படியிருந்தாலும், மேற்கூறிய முன்னேற்றங்கள் ஒரு சிலரின் (குறைந்தபட்சம் ஒரு சிலரின்) மனசாட்சியை அதிர்ச்சிக்குள்ளாக்கியது, இது 2014 ஆம் ஆண்டில் இந்திய மருத்துவக் குழும சட்டம், 1956 மற்றும் இந்திய மருத்துவக் குழுவை (எம்.சி.ஐ) நவீனமானதாகவும், நடைமுறையில் உள்ள நிலைமைகளுக்கு ஏற்றதாகவும் மாற்ற அரசுக்கு பரிந்துரைகளை வழங்கவும், டாக்டர் ரஞ்சித் ராய் சவுத்ரி தலைமையில் ஒரு நிபுணர் குழுவை உருவாக்குவதற்கு வழிவகுத்தது.

39. மேற்கூறப்பட்ட நிபுணர்கள் குழுவின் அறிக்கையானது உடல்நலம் மற்றும் குடும்ப நலம் தொடர்பான நாடாளுமன்ற நிலைக்குழுவால் ஆய்வு செய்யப்பட்டு, அவர்கள் 92-வது அறிக்கை என அழைக்கப்படும் அறிக்கையை சமர்ப்பித்தனர். மேலும், எம்.சி.ஐ-யில் சீர்திருத்தங்களுக்கான அனைத்து விருப்பங்களையும் ஆய்வு செய்வதற்கும், முன்னோக்கி செல்லும் வழியை பரிந்துரைப்பதற்கும் துணைத் தலைவர், என்.ஐ.டி.ஐ ஆயோக் தலைமையில் நான்கு பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. அந்த குழு "தேசிய மருத்துவ ஆணைய (என்.எம்.சி) மசோதா" வரைவை உருவாக்கியது.

40. **நவீன பல் மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம் மற்றும் பலர் எதிராக மத்தியப் பிரதேச மாநிலம் மற்றும் பலர்** [5] என்ற வழக்கில் பரிந்துரைகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசுக்கு இந்த நீதிமன்றம் உத்தரவிட்டது. இத்தகைய முன்னேற்றங்களின் வெளிச்சத்தில்தான் தேசிய மருத்துவ ஆணையச் சட்டம், 2019 (இனி 'என்.எம்.சி சட்டம்' என குறிப்பிடப்படுகிறது) நிறைவேற்றப்பட்டது.

---

[5] (2016) 7 எஸ்.சி.சி 353

41. என்.எம்.சி சட்டமானது தேசிய மருத்துவ ஆணையம் மற்றும் நான்கு தன்னாட்சி வாரியங்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு ஆணைகளுடன் உள்ளமைக்கும் விதமாக வழங்கப்பட்டுள்ளது. இந்தியாவில் உள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்களால் வழங்கப்படும் மருத்துவத் தகுதிகளை பிரிவு 35-ன் கீழ் அங்கீகரிக்கவும், இந்தியாவிற்கு வெளியே உள்ள மருத்துவ நிறுவனங்களால் வழங்கப்படும் மருத்துவத் தகுதிகளை பிரிவு 36-ன் கீழ் அங்கீகரிக்கவும் இந்த சட்டம் வழங்குகிறது. சட்டத்தின் பிரிவு 36 பின்வருமாறு கூறுகிறது.

"36. இந்தியாவிற்கு வெளியே உள்ள மருத்துவ நிறுவனங்களால் வழங்கப்படும் மருத்துவத் தகுதிகளின் அங்கீகாரம்.

(1) இந்தியாவிற்கு வெளியே உள்ள நாட்டில் உள்ள ஒரு அதிகாரம். அந்த நாட்டின் சட்டத்தால் அந்த நாட்டில் மருத்துவத் தகுதிகளை அங்கீகரிப்பதற்காக ஒப்படைக்கப்பட்டால், இந்தியாவில் அத்தகைய மருத்துவத் தகுதிக்கு அங்கீகாரம் வழங்க ஆணையத்திற்கு விண்ணப்பம் செய்தால், அந்த ஆணையம், அது அவசியமாகக் கருதும் அத்தகைய சரிபார்ப்புக்கு உட்பட்டு, அந்த மருத்துவத் தகுதிக்கு அங்கீகாரம் வழங்கும் அல்லது வழங்க மறுக்கும்.

அப்படியானால், அத்தகைய அங்கீகாரத்தை வழங்க மறுக்கும் முன், ஆணையம் அத்தகைய அதிகாரியிடம் கேட்க நியாயமான வாய்ப்பை வழங்கும்.

(2) உட்பிரிவு (1) ன் கீழ் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவத் தகுதியானது, இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட மருத்துவத் தகுதியாக இருக்க வேண்டும், மேலும் அத்தகைய தகுதிகள் ஆணையத்தால் விதிமுறைகளில் குறிப்பிடப்படும் வகையில் பட்டியலிடப்பட்டு பராமரிக்கப்படும்.

(3) உட்பிரிவு (1)-ன் கீழ் மருத்துவத் தகுதிக்கு அங்கீகாரம் வழங்க ஆணையம் மறுக்கும் பட்சத்தில், சம்பந்தப்பட்ட அதிகார அமைப்பு, அத்தகைய முடிவை எதிர்த்து முப்பது நாட்களுக்குள் மத்திய அரசிடம் மேல்முறையீடு செய்யலாம்.

(4) இந்தச் சட்டம் தொடங்கும் தேதிக்கு முன் மற்றும் இந்திய மருத்துவக் குழும சட்டம், 1956 (102 இன் 1956)-ன் இரண்டாவது அட்டவணை மற்றும் மூன்றாவது அட்டவணையின் இரண்டாவது பகுதியில் சேர்க்கப்பட்டுள்ள அனைத்து மருத்துவத் தகுதிகளும் இந்த சட்டத்தின் நோக்கங்களுக்காக அங்கீகரிக்கப்பட்டு, விதிமுறைகளால் குறிப்பிடப்படும் விதத்தில் ஆணையத்தால் பட்டியலிடப்பட்டு பராமரிக்கப்படும்.

42. இதேபோல், சட்டம் 38 வது பிரிவின் கீழ் இந்தியாவில் உள்ள மருத்துவ நிறுவனங்களால் வழங்கப்பட்ட மருத்துவத் தகுதிக்கான அங்கீகாரத்தைத் திரும்பப் பெறுவதற்கும், இந்தியாவுக்கு வெளியே உள்ள மருத்துவ நிறுவனங்களால் வழங்கப்பட்ட மருத்துவத் தகுதிகளை நீக்குவதற்கும் சட்டம் வழங்குகிறது. இந்தியாவிற்கு வெளியே உள்ள ஒரு நாட்டில் உள்ள மருத்துவ நிறுவனம் வழங்கும் எந்த மருத்துவத் தகுதிக்கும் அங்கீகாரம் வழங்க பிரிவு 40 ல் ஒரு சிறப்பு விதிகள் இருந்தது, அத்தகைய தகுதி பெற்ற ஒருவரின் மருத்துவப் பயிற்சி தேசிய வெளியேறும் தேர்வில் அவர் பெறும் தகுதியைப் பொறுத்தது.

43. சட்டத்தின் பிரிவு 56 மத்திய அரசுக்கு விதிகளை உருவாக்கும் அதிகாரத்தை வழங்கும் அதே வேளையில், பிரிவு 57 தேசிய மருத்துவ ஆணையத்திற்கு விதிமுறைகளை உருவாக்கும் அதிகாரத்தை வழங்குகிறது. ஒழுங்குமுறைகளை உருவாக்கும் ஆணையத்தின் அதிகாரம் மிகவும் பரந்ததாக இருப்பதை உறுதி செய்வதற்காக, பிரிவு 57 ன் உட்பிரிவு (2) 46 விஷயங்களைப் பட்டியலிடுகிறது, இது தொடர்பாக என்.எம்.சி விதிமுறைகளை உருவாக்கலாம்.

44. பிரிவு 15-ன் துணைப்பிரிவு (4) உடன் படிக்கப்பட்ட பிரிவு 57 -ல் வழங்கப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி உரிம விதிமுறைகள் 2021 வெளியிடப்பட்டது. தேசிய வெளியேற்ற தேர்வை நடத்துவதற்கு பிரிவு 15-ல் வழங்கப்பட்டுள்ளது. பிரிவு 15-ன் உட்பிரிவு (4) ஆனது வெளிநாட்டு மருத்துவத் தகுதியைக் கொண்ட எந்தவொரு நபரும் மருத்துவம் பயிற்சி செய்வதற்கான உரிமத்தைப் பெறுவதற்கான தேசிய வெளியேற்ற தேர்வில் தகுதி பெற வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. பிரிவு 15(4) பின்வருமாறு கூறுகிறது -

"15. தேசிய வெளியேற்ற தேர்வு: Xxx xxxxxx

(4) வெளிநாட்டு மருத்துவத் தகுதியைக் கொண்ட எந்தவொரு நபரும் மருத்துவப் பயிற்சியாளராக மருத்துவப் பயிற்சி பெறுவதற்கான உரிமத்தைப் பெறுவதற்கும், மாநிலப் பதிவு அல்லது தேசியப் பதிவேட்டில் விதிமுறைகளால் குறிப்பிடப்படும் விதத்தில் பதிவு செய்வதற்கும் தேசிய வெளியேற்ற தேர்வுத் தகுதியை பெற வேண்டும்.

xxx xxx xxx"

45. பிரிவு 57 இன் உட்பிரிவு (2)ன் கூறு (k) என்.எம்.சி- ஆல் உருவாக்கப்பட்ட விதிமுறைகள் "வெளிநாட்டு மருத்துவத் தகுதி கொண்ட ஒருவர், பிரிவு 15 இன் உட்பிரிவு (4) இன் கீழ் தேசிய வெளியேறும் தேர்வில் தகுதி பெறும் விதம் ஆகியவற்றைக் கையாளலாம்" என்பதைக் குறிக்கிறது.

46. இந்த நிலையில், கேரள மாநில மருத்துவக் குழுமம், மத்திய அரசு எம்.சி.ஐயை சரிசெய்யும் வரை காத்திருக்காமல், தலைமை தாங்கி, 20.10.2017 தேதியிட்ட தீர்மானத்தை நிறைவேற்றி, வெளிநாட்டு மருத்தவ பட்டதாரிகள், எம்.சி.ஐ-ல் அங்கீகரிக்கப்பட்ட இந்தியாவில் உள்ள எந்தவொரு நிறுவனத்திலும் ஒரு வருட பயிற்சியை முடித்து திருவாங்கூர் கொச்சி மருத்துவப் பயிற்சியாளர்கள் சட்டம், 1953-ன் கீழ் கேரள மாநிலத்தில் நிரந்திரப் பதிவைப் பெற அனைவருக்கும் கட்டாயமாக்குகிறது என்பதைச் சுட்டிக் காட்ட ஒரு சிறிய வேறொருவழியை நாம் எடுக்கலாம். மேற்படி தீர்மானத்தின் அடிப்படையில், சில வெளிநாட்டு மருத்துவப் பட்டதாரிகளின் நிரந்திரப் பதிவு விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. மேலும் அந்த நிராகரிப்பானது, **டாக்டர் அமலாகிரிஜன் மற்றும் பலர் எதிராக பதிவாளர் திருவாங்கூர் - கொச்சின் மருத்துவ குழுமம் மற்றும் பலர்** [6] என்ற வழக்கில் உள்ளடக்கப் பொருளக எதிர்ப்புக்குள்ளானது. மாநில மருத்துவக் குழுமத்தின் தீர்மானம் சட்டத்தின் 37 வது பிரிவை மீறும் வகையில் உள்ளது என்ற

அடிப்படையில் எதிர்க்கப்பட்டது. ஆனால், இந்த எதிர்ப்பை கற்றறிந்த கேரள உயர் நீதிமன்ற நீதிபதி நிராகரித்தார்.-

47. ஆனால் அதைத் தொடர்ந்து, அதே தீர்மானத்தை மற்றொரு வெளிநாட்டு மருத்துவ பட்டதாரி **சாதியா சியாத் எதிராக கேரள மாநிலம் மற்றும் பலர்**[7] என்ற வழக்கில் எதிர்ப்பு தெரிவித்தார். மற்றொரு கற்றறிந்த கேரள உயர்நீதிமன்ற நீதிபதி அவர் முன்பு தாக்கல் செய்யப்பட்ட நீதி பேராணை மனுக்களை பரிசீலனை செய்யும் போது பின்வரும் நான்கு எழுவினாக்களை வரைந்தார்;

"(i) வெளிநாட்டில் அவர்/அவள் மேற்கொள்ளும் மருத்துவப் படிப்பின் ஒரு பகுதியாக பயிற்சி பெறாத ஒருவர் ஐ.எம்.சி சட்டத்தின் பிரிவு 14 (4A)-ன் கீழ் வழங்கப்படும் பரிசோதனை தேர்வில் தோன்ற தகுதியுடையவரா?

(ii) வெளிநாட்டில் உள்ள மருத்துவ நிறுவனத்தில் அனுமதி பெற்ற பிறகு ஐ.எம்.சி சட்டத்தின் பிரிவு 13 (4B)-ன் படி தகுதிச் சான்றிதழைப் பெற்ற ஒருவருக்கு அவர்/அவள் மற்ற எல்லா தகுதிகளையும் பூர்த்தி செய்திருந்தால், மாநில மருத்துவப் பதிவேட்டில் பதிவு செய்தல் மறுக்கப்படுமா?

(iii) வெளிநாட்டில் உள்ள ஒரு மருத்துவ நிறுவனத்தில் மருத்துவத் தகுதியைப் பெற்று, அதன்பிறகு கல்வி பயின்ற நாட்டில் ஒரு வருட பயிற்சியை மேற்கொண்டு மற்றும் மாநில மருத்துவப் பதிவேட்டில் பதிவு செய்வதற்கான அனைத்துத் தகுதிகளையும் பூர்த்தி செய்த நபர் அந்த நோக்கத்திற்காக சி.ஆர்.ஆர்.ஐ-க்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட வேண்டுமா ?

(iv) டி.சி.எம்.பி சட்டத்தின் கீழ் செயல்படும் மாநில மருத்துவ குழுவிற்கு சான்றாவணம் p21-ன் தன்மையில் முடிவுகளை எடுக்க அதிகாரம் உள்ளதா?

[6] 2019 (4) எஸ்.சி.டி. 224 (கேரளா) [7] 2021 (6) கே.எல்.டி. 94

48. கேரள உயர் நீதிமன்றம், (i) வெளிநாடுகளில் உள்ள மருத்துவ நிறுவனங்களில் மேற்கொள்ளும் மருத்துவப் படிப்பின் ஒரு பகுதியாக பயிற்சியை முடித்த மாணவர்கள் மட்டுமே பரிசோதனை தேர்வில் பங்கேற்க தகுதியுடைவர்கள் என்ற மாநில மருத்துவக் குழுவின் நிலைப்பாடு, நீடிக்க முடியாதது;

(ii) 1956 சட்டம் மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிமுறைகளின்படி, மாநில மருத்துவப் பதிவேட்டில் மருத்துவப் பயிற்சியாளராகப் பதிவு செய்வதற்கான அனைத்துத் தேவைகளையும் ஒரு விண்ணப்பதாரர் பூர்த்தி செய்தால், அவர் பதிவு செய்வதை மாநில மருத்துவ குழு மறுக்க முடியாது;

(iii) 1956 சட்டத்தின் விதிகள் மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட ஒழுங்குமுறைகளின்படி, மாநில மருத்துவப் பதிவேட்டில் மருத்துவப் பயிற்சியாளராகப் பதிவு செய்வதற்கான அனைத்துத் தேவைகளையும் விண்ணப்பதாரர் பூர்த்தி செய்திருந்தால், வெளிநாட்டில் உள்ள மருத்துவ நிறுவனத்தில் சேர்க்கைக்கு பிறகே தகுதிச் சான்றிதழ் பெறப்பட்டதாகவும் மற்றும் அதன் விளைவாக பரிசோதனை தேர்வில் தோன்றுவதற்கு தகுதி பெறவில்லை என்று கூறி மாநில மருத்துவ குழு பதிவை மறுக்க இயலாது;

(iv) இத்தகைய வெளிநாட்டு மருத்துவ பட்டதாரிகள் நிரந்திரப் பதிவுக்காக சி.ஆர்.ஆர்.ஐ-க்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று கேரள மாநில மருத்துவக் குழு விதித்துள்ள தேவையானது, 1956 சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளின் தேவைகளுக்கு முரணானது; மற்றும்

(v) 1956 சட்டம் அரசமைப்பின் ஏழாவது அட்டவணையின் பட்டியல் I -ன் 66 வது பதிவுடன் தொடர்புடையது என்பதால், பட்டியல் III-ன் பதிவு 25/26 உடன் தொடர்புடைய கேரள சட்டத்தை விட அது மேலோங்கும்.

49. சாதியா சியாத் தாக்கல் செய்த நீதி பேராணை மனுவை கேரள உயர் நீதிமன்றம் அனுமதித்தாலும், அயல்நாட்டு மருத்துவ பட்டதாரிகள், மாநிலத்திற்குத் தனித்தன்மை வாய்ந்த நோய்கள் மற்றும் சிகிச்சையின் தேவைகளைப் பழக்கப்படுத்திக்கொள்ள, புதிதாக பயிற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று பொருத்தமான சட்டத் திருத்தங்களைக் கொண்டு வருவதற்காக, மாநில மருத்துவக் குழு, தேசிய மருத்துவக் குழுவின் கவனத்திற்குக் கொண்டு வருவதைத் தடுக்காது என்று அந்தத் தீர்ப்பில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

50. எனவே, சட்டத்தின் பிரிவு 57 வழங்கிய அதிகாரத்தைப் பயன்படுத்தி தேசிய மருத்துவக் குழு பொருத்தமான விதிமுறைகளை வழங்குவதற்கு ஒரு நிலை அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி பிரிவு 15(4) உடன் படிக்கப்பட்ட பிரிவு 57 மூலம் வழங்கப்பட்ட அதிகாரத்தை பயன்படுத்தி உரிம விதிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன மற்றும் சட்டத்தின் பிரிவு 24(1) உடன் படிக்கப்பட்ட பிரிவு 57 மூலம் வழங்கப்பட்ட அதிகாரத்தை பயன்படுத்தி சி.ஆர்.எம்.ஐ விதிமுறைகள் வெளியிடப்பட்டன. இந்த வளர்ச்சிகளை மனதில் வைத்து, இந்த விதிமுறைகளுக்கு எதிரான காரணங்களின் ஏற்புநிலையை தற்போது சோதிக்கலாம்.

51. நாம் முன்பே பார்த்தது போல், மேல்முறையீடு செய்பவர் பல காரணங்களுக்காக உரிம விதிமுறைகளின் விதிகள் 4(அ) (i) மற்றும் ஒழுங்குமுறை 4(அ) (ii), 4(ஆ) மற்றும் 4(இ) ஆகியவற்றின் ஏற்பு நிலையை எதிர்த்தார். அதில் ஒரு காரணத்தின் அடிப்படையானது சட்டத்தின் கீழ் அதிகாரம் இல்லாமை என்பதாகும். ஆனால் மேலே பிரித்தெடுக்கப்பட்ட விதிகள் தேசிய மருத்துவக் குழுமத்திற்கு மேற்கண்ட விதிமுறைகளை வரையறுக்க அதிகாரம் இருப்பதைக் காணலாம்.

52. குறைந்தபட்ச தரங்களின் பரிந்துரை நிச்சயமாக ஒரு பாடத்திற்கான குறைந்தபட்ச காலத்தின் பரிந்துரையை உள்ளடக்கியிருக்கும். மற்ற நாடுகளின் மருத்துவ நிறுவனங்கள் தங்கள் நாட்டு மாணவர்களுக்கு 54 மாதங்களுக்கும் குறைவான கால அளவை பரிந்துரைக்கலாம். ஆனால், பதவியில் இருப்பவர் இந்தியாவில் நிரந்திரப் பதிவு செய்ய விரும்பினால், தேசிய மருத்துவக் குழு மற்றும் மத்திய அரசு குறைந்த கால வெளிநாட்டு மருத்துவப் பட்டங்களை அங்கீகரிக்க வேண்டிய அவசியமில்லை.

53. அதே வெளிநாட்டு மருத்துவ நிறுவனத்தில் குறைந்தபட்சம் 12 மாதங்களுக்கு பயிற்சிப் பரிந்துரைக்கப்படுவதும் பயிற்சியின் பிரதி என்று கூற முடியாது. பயிற்சியின் நோக்கமானது மாணவர்களின் கல்வி அறிவை அவர்களின் பாடங்களில் அதாவது நோயாளிகளின் மீது பயன்படுத்துவதற்கான திறனை சோதிப்பதாகும். மற்ற நாடுகளின் மருத்துவ நிறுவனங்கள் தங்கள் நாட்டின் மக்கள்தொகையில் தங்கள் திறன்களை சோதிக்காத வகையில் மாணவர்களுக்கு கடுமையான பயிற்சியை வலியுறுத்தக்கூடாது. ஆனால் அதை நாம் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை.

54. அதேபோன்று, வெளிநாட்டில் மருத்துவக் கல்வி வழங்கப்படும் மாணவர்கள் தாங்கள் படித்த நாட்டின் மக்கள் தொகையில் முதலில் தங்கள் திறமைகளை வெளிப்படுத்துவதை உறுதிசெய்ய, ஒழுங்குமுறை 4(அ)-ன் கீழ் தேவையாக்கப்பட்டுள்ளது. ஒரு தலைமை சமையல்காரர் தான் தயாரித்த உணவை விருந்தினர்களுக்கு பரிமாறுவதற்கு முன்பு சுவைக்க வேண்டிய அவசியம் தன்னிச்சையானது என்று சொல்ல முடியாது. எனவே, உரிம விதிமுறைகளுக்கான எதிர்ப்பு முற்றிலும் அடிப்படையற்றது.

55. பிரிவு 36 (4) 54 மாதங்களுக்கும் குறைவான கால எம்.பி.பி.எஸ் படிப்புகளை அங்கீகரிக்கிறது. எனவே உரிம விதிமுறைகள் ஒரு துணைச் சட்டமாக இருப்பதால், அது அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டது என்பது முற்றிலும் நிலைக்கதக்கதல்ல. பிரிவு 36-ன் உட்பிரிவு (4) கீழ் உள்ள அனைத்தும், சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்பே அங்கீகரிக்கப்பட்ட தகுதிகள் மற்றும் 1956 சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் இரண்டாம் அட்டவணை மற்றும் பகுதி II-ல் சேர்க்கப்பட்டுள்ளது, கடந்த கால பாவங்கள் முற்றிலும் கலையப்பட வேண்டும் என்ற சங்கதியானது, திட்டத்தை திருத்துவதற்கான ஒரு அடிப்படையாக எடுத்துக்கொள்ள இயலாது. உண்மையில் பிரிவு 60 ஆனது ரத்து மற்றும் சேர்க்கை சம்மந்தப்பட்ட, உட்பிரிவு (2)-ன் கூறு (b)-ன் கீழ், ஏற்கனவே பெற்ற உரிமை, சலுகை அல்லது கடமை ஆகியவற்றைக் குறிக்கிறது. இது எதிர்கால மாணவர்களுக்காக பரிந்துரைக்கப்பட்டவற்றுடன் முரண்படுவதாகக் கூற முடியாது. எவ்வாறாயினும், பிரிவு 36 வெளிநாட்டு மருத்துவப் படிப்புகளை அங்கீகரிப்பதை மட்டுமே குறிக்கிறது. ஆனால் மருத்துவ பயிற்சியாளராக பதிவு செய்வதை குறிக்கவில்லை. பதிவானது பிரிவு 33க்கு உட்பட்டது. எனவே, பிரிவு 36(4) மேல்முறையீட்டாளருக்கு உதவாது.

56. நாட்டிற்கு அதிகமான மருத்துவர்கள் தேவை மற்றும் வெளிநாட்டு மருத்துவ பட்டதாரிகளின் பதிவுகளை கட்டுப்படுத்துவதன் மூலம், பிரிவு 19 (1) (g)-ன் கீழ் தொழில் வல்லுநர்களின் அடிப்படை உரிமையும், வகுமுறைக்கூறு 21-ன் கீழ் குடிமக்களின் அடிப்படை உரிமையும் பாதிக்கப்படுகிறது என்ற வாதுரை நிராகரிக்கப்பட வேண்டியதாகும். நாட்டிற்கு அதிகமான மருத்துவர்கள் தேவை என்பது உண்மைதான், ஆனால் அதற்குத் தகுதியான மருத்துவர்கள் தேவை, மேலும் தங்கள் தாய் மண்ணில் மட்டுமே தங்களது திறமைகளை

சோதிக்க வேண்டும் என்று வெளிநாடுகளில் உள்ள நிறுவனங்களில் பயிற்சி பெற்றவர்கள் வேண்டுவதில்லை.

57. இந்த ஒழுங்குமுறைகள் புற நிலவரை சட்டத்தை உருவாக்குகின்றன என்ற வாதம் தவறானது. இந்த ஒழுங்குமுறைகள் அந்த நிறுவனங்கள் அமைந்துள்ள நாடுகளில் பயிற்சி செய்ய விரும்பும் மாணவர்களுக்கு குறைந்தபட்ச தரங்களை நிர்ணயிப்பதன் மூலம் அந்த நாடுகளின் இறையாண்மையில் நுழைவதில்லை. இந்த விதிமுறைகள் இந்தியாவில் பயிற்சி செய்ய விரும்பும், அந்த நிறுவனங்களில் படிப்பவர்களுக்கு, பூர்த்தி செய்ய வேண்டிய குறைந்தபட்ச தரங்களை மட்டுமே பரிந்துரைக்கின்றன.

58. சி.ஆர்.எம்.ஐ விதிமுறைகளுகளின் எதிர்ப்புகளை பொறுத்த வரையில், அது எந்த பொருளும் இல்லாமல் உள்ளது. கட்டாய பயிற்சி இல்லாமல் முதன்மை மருத்துவத் தகுதியை மட்டும் வழங்கும் நிறுவனங்கள் சில நாடுகளில் இருந்தால், மாணவர்கள் அந்த நிறுவனங்களில் சேர்க்கை பெறக்கூடாது. தகுதிவாய்ந்த மருத்துவ நிபுணர்களாக மாற வேண்டும் என்ற மனகுழப்பத்தோடு ஏற்படும் வேகம், வெற்றிக்கான குறுக்குவழிகள் வழங்கும் நாடுகளுக்கு அவர்களை அழைத்துச் செல்ல முடியாது. அட்டவணை -II ன் பத்தி 2 (a)-ன் கீழ் உள்ள விதிமுறைகளின் கீழ் இந்திய மருத்துவப் பட்டதாரிகளுக்கு இணையாக வெளிநாட்டு மருத்துவப் பட்டதாரிகள் பயிற்சிகளை மேற்கொள்வது என்பது ஒரே போன்ற திறமைகளை பெற்றவர்கள் மட்டுமே மருத்துவப் பயிற்சி செய்ய அனுமதிக்கப்படுவதை உறுதி செய்வதாகும்.

59. இந்த ஒழுங்குமுறைகளின் அட்டவணை -II ன் பத்தி 2 (c) (i)-ல் உள்ள பரிந்துரையானது புதிதாக திறக்கப்பட்ட மற்றும் இன்னும் அங்கீகரிக்கப்படாத கல்லூரிகளில்

இது போன்ற வெளிநாட்டு மருத்துவப் பட்டதாரிகளை முதலில் நியமிக்கலாம் என்பது அவசியத்திற்கான ஒரு பரிந்துரையாகும். நாட்டின் அனைத்து மருத்துவ நிறுவனங்களும், அனுமதிக்கப்பட்ட மாணவர்களை கொள்திறன் அளவுக்கு மட்டுமே பயிற்சியை வழங்கத் தயாராக உள்ளன. எனவே, ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் மீது தேவையற்ற சுமை சுமத்தப்படாமல் இருப்பதை உறுதி செய்வதே இந்த ஒழுங்குமுறையின் நோக்கமாகும்.

60. எனவே, சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்த நீதி பேராணை மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டது முற்றிலும் நியாயமானது என்பதைக் காண்கிறோம். முதற் கட்டத்திலேயே சிறப்பு அனுமதி மனுக்கள் நிராகரிக்கப்பட வேண்டுமென்று என்றபோதிலும், இந்த ஒழுங்குமுறைகளுக்கான எதிர்பை ஆரம்பத்திலேயே தவிர்த்து அவை வேறு வடிவத்தில் அல்லது அவதாரத்தில் தோன்றாத வகையில் இருக்க வரலாற்று உண்மைகளை பதிவு செய்வதற்கான முயற்சியை எடுத்துக்கொள்ள பொருத்தமானது என்று நாங்கள் எண்ணினோம்.

61. மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, மேல்முறையிடுகள் தள்ளுபடி செய்யப்படுகின்றன. இருப்பினும், மேல்முறையீட்டாளர் மீது சென்னை உயர்நீதிமன்றம் விதித்துள்ள செலவுத் தொகைகள், அவர் ஒரு மாணவர் என்ற உண்மையைக் கருத்தில் கொண்டும், அத்தகைய விஷயங்களில் நீதிமன்றம் எந்த அளவிற்கு அனுதாபம் காட்ட முடியும் என்பதைக் காட்டும் நோக்கதிற்காகவும் தள்ளுபடி செய்யப்படுகின்றன.

மேல்முறையீட்டு மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டது.

பொறுப்புத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."